பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

தரமான
★ சேட்டிங்
★ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

26

இம்போட்டற் நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன் பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ் வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆடி மீ 02 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 02 ( 17 - 07 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 133

## யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர

# நாம் நேசக்கரம் நீட்டும்போது

# பலவீனம் எனக் கருதி உதாசீனம்

### இந்தியா மீது குற்றஞ்சாட்டி விடுதலைப் புலிகள் அறிக்கை

வவுனியா, ஜூலை 17

எமது மக்களின் எதிர்கால சுபீட்சத்திற்காக, நாங்கள் நேசக்கரங்களை நீட்டிய போதெல்லாம், அதை எங்கள் பலவீனமாக நினைத்து இந்திய அரசு உதாசீனம் செய்கிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு விடுத்த அறிக்கை ஒன்றில் இந்தியா மீது குற்றஞ்சாட்டி உள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காலங்காலமாக நடைபெற்றுவந்த இன அழிப்பு, நில அபகரிப்பு, கலாசார சீர்குலைப்பு போன்ற இன்னோரன்ன விடயங்களிலிருந்து இந்தியா தம்மைப் பாதுகாக்கும் என எமது மக்கள் பூரணமாக நம்பினார்கள். ஆனால் இன்று எந்தவிதமான விலையும் கொடாமல் இலங்கை அரசு வெற்றிகரமாக சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி தமிழர்களின் பாரம்பரிய பூமியைக் கபளீகரம் செய்வதை இந்திய அரசு பார்த்துக் கொண்டிருக்கின்றது. அதை நிறுத்துவதற்காக எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்காமல் இருப்பது இலங்கை அரசின் இனவெறிக் கொள்கைக்கு இந்திய அரசும் உடந்தையாக இருப்பதையே காட்டுகின்றது. தமிழ் மக்களை தமிழ் மண்ணிலிருந்து பூண்டோடு ஒழிக்கும் இலங்கை அரசின் கனவை இந்திய அரசு கனகச்சிதமாக நிறைவேற்றவே துணைசெய்து கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் கட்டவிழ்த்துவிடப்பட்டு ஒரு வருடத்தை அண்மித்துக்

[8 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



உந்தப் பொலிஸ் டிப்பாட்மென்ட்காரர், தமிழருக்கு 2 சத விதத்துக்கு மேலே ஒரு எள்ளளவும் கூடக் கொடுக்க மாட்டினம் ! பாத்தியளோ !!

#### சார்ஜண்ட் பதவிகள்:

### 500 பொலீஸாரில் 10 தமிழருக்கே 'சான்ஸ்'

யாழ்ப்பாணம் ஜூலை 17

ஸ்ரீலங்கா பொலீஸில் கடமையாற்றும் ஐநூறு பொலீஸார், பொலீஸ் சார்ஜண்டுகளாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் பத்துப் பேர் மட்டுமே தமிழர்கள் எனத் தெரிய வருகிறது.

சார்ஜண்டுகளாகப் பதவி உயர்வு பெற்ற தமிழ்ப் பொலீஸாரின் விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த திருவாளர்கள் வி. பாக்கியநாதன், த. ஸ்ரீஸ்கந்தராசா, எஸ். சௌந்தரராஜன், எஸ். பரஞ்சோதி, த. குணரத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கில் மாற்றம்

கோப்பாய், ஜூலை 17

கோப்பாய், நீர்வேலி பகுதிகளில் மாலை 7மணி முதல் காலை 5 மணி வரை இருந்த ஊரடங்கு சட்ட நேரம் தற்போது இரவு 9 மணி தொடக்கம் காலை 5மணி வரை மாற்றப்பட்டுள்ளது. [ஒ-சி-72]

#### முல்லைத்தீவு, கிளிநொச்சியில்

### அமைதிப் படையினரின் நடவடிக்கைகள் தீவிரம்

இந்திய அமைதிப் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு கிளிநொச்சி, திருகோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளிலே படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### நெடுங்கேணி வாழ் மக்கள் நடத்திய பேரணி

#### முகாம்வரை செல்ல அனுமதி மறுப்பு

வவுனியா, ஜூலை, 17

அமைதிப்படை முகாமுக்குப் பேரணியாகச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதனால் பேரணி பாடசாலை மைதானத்தைச் சென்றடைந்தது. இச்சம்பவம் நெடுங்கேணியில் இடம்பெற்றது.

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை இரண்டையும் வலியுறுத்தியும், வெலிஓயா குடியேற்றத்தைத்தடை செய்யக் கோரியும் நெடுங்கேணியில் மக்கள் பேரணி ஒன்றை நடத்தினர்.

ஒலுமடு கிராமத்தில் இருந்து ஆரம்பமாகிய இப்பேரணியில் சுமார் இரண்டாயிரம் பேர் கலந்து கொண்டார்கள்.

★ நிபந்தனையற்ற யுத்தநிறுத்தம் வேண்டும்.

★ பேச்சுவார்த்தை உடன் தொடங்கப்பட வேண்டும்.

★ வெலிஓயா குடியேற்றத்தைத் தடை செய்.

★ நெடுங்கேணி பிரதேசத்தில் சட்டவிரோதமாகப் பதிவு செய்துள்ள சிங்கள வாக்குகளை ரத்துச் செய்.

★ சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை உடன் விடுதலை செய்.

★ இந்திய இராணுவமே, பொதுமக்களைச் சித்திரவதை செய்யாதே, போன்ற சுலோக அட்டைகளைப் பொதுமக்கள் பேரணியில் எடுத்துச் சென்றுர்

[8 ஆம் பக்கம் பார்க்க]

### இளைஞர் சுட்டுக்கொலை

கடந்த வெள்ளியன்று அதிகாலை மன்னார் ஆஸ்பத்திரி சந்தியில் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாதசிலரால்சுட்டுக் கொல்லப்பட்டார்.

இறந்தவர் கமல்என்ற இளைஞர் என்று பின்னர் அடையாளம் காணப்பட்டது. (ஒ-164)

### வெறிச்சோடிய நிலையில் பரந்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பரந்தன் பகுதி நேற்று முற்றுக வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டது. அப்பகுதி மக்களின் பதற்றம் இன்னும் தணிந்தபாடில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை பரந்தன் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கடைகள் எதுவும் நேற்றுத் திறக்கப்படவில்லை. வாகனப் போக்குவரத்துகள் இப்பகுதியூடாக நடைபெற்ற போதிலும் அமைதிப் படையினரின் நடமாட்டமே அதிகரித்துக் காணப்பட்டது. (ஒ-9)

### வர்த்தகர்கள் விசாரணையில்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பரந்தன் சந்தைக்கு அருகாமையில் உள்ள கடை உரிமையாளர்கள் சிலர் இந்திய அமைதிப் படையினரால் நேற்று விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

சில கடை உரிமையாளர்கள் இல்லா தவிடத்து கடைகளில் கடமை புரிந்த ஊழியர்களைப் படையினர் அழைத்துச் சென்றுள்ளனர்.

வெள்ளிக்கிழமை பரந்தனில் நடைபெற்றதுப் பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கே இவர்களைப் படையினர் அழைத்துச் சென்றதாகத் தெரியவந்தது. (ஒ-10)

### வல்லையில் மீண்டும் சென்றிகள்

வடமராட்சி, ஜூலை 17

வல்லைச் சந்தியில் மீண்டும் அமைதிப்படையினர் சென்றிகளை அமைத்து சோதனை நடத்துகிறுர்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இந்தச் சென்றிகள் செயற்படத் தொடங்கியுள்ளன.

அவ்வழியாகச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் சோதனையிடப்படுகின்றன. [ஒ-160]

### துக்கதினம் அனுஷ்டிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வெலிக்கடைச் சிறைச்சாலை படுகொலைகளின் ஐந்தாவது வருட துயர நினைவை 25 ஆம் திகதி திங்கட்கிழமை துக்கதினமாக கொள்ளும்படி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] யின் பொதுச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் மத்திய குழு சார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [அ-5]

#### அகதிகளுக்கான ஸ்தானிகராலய

### ஐ. நா. கிளை அலுவலகம் நாளை யாழ். நகரில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் கிளை யாழ்ப்பாணத்தில் நாளை திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

யாழ்- கோவில் வீதியில் திறக்கப்படவிருக்கும் பிரஸ்தாப அலுவலகம் யாழ்- மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக சீர்குலைந்த மக்கள் வாழ்வையும் பொருளாதாரத்தையும் மீளக்கட்டி எழுப்பி, அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டங்களில் நேரடியாக ஈடுபடும் என்று தெரியவருகிறது.

இதுசம்பந்தமான பூர்வாங்க வேலைகளைக் கவனிப்பதற்கு இந்த அலுவலகத்தின் கொழும்புப்பிரதிநிதிகளான திரு. ஆர். டிஸ்பென்ஸாவும் செல்வி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

17 - 7 - 1988
ஆடி - 02
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
09-00முதல் 10-30வரை
ராகுகாலம்:
04-30 முதல் 06-00வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்
சதுர்த்தி விரதம்

### ராஜா மரணம்

கொழும்பு, ஜூலை 17

கண்டி தலதா மாளிகைக்குச் சொந்தமான பட்டத்துயானை 'ராஜா' நேற்று உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

'ராஜா'வின் வயது 81. இலங்கையின் 'அருஞ் செல்வம்' என ராஜாவைப் பிரகடனப்படுத்தியது கொழும்பு அரசு.

சகல அரச மரியாதைகளுடன் ராஜா நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

வருடாந்தம் நடக்கும் கண்டிப் பெரஹராவில் புத்தரின் புனித சின்னத்தை ஊர்வலமாகச் சுமந்து செல்லும் பெருமைக்குரியது ராஜா.

### யாழ். செயலகத்தை 3 நாட்கள் முன்னதாக இயங்க வைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். செயலகத்தின் இம்மாதசெயற்பாடு ஐ வழமையை விட 3 நாட்கள் முன்னதாக 20ஆம் திகதியே ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்யப்பட்டு வருவதாக அறியவந்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சிவில் நிர்வாகச் சீர்குலைப்பு நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக, யாழ்- செயலக செயற்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதன் அடிப்படையில் செயலகம் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும்- 22 ஆம் திகதியின் பின்னால் வரும் கடைசி வாரத்தில் மட்டும் இயங்க அனுமதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இம்மாதத்தின் கடைசி வாரத்தில் 22 ஆம் திகதியின் பின் வரும் வேலை நாட்களில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

#### கருணாநிதி சொல்கிறார்:

### உண்மை நிலையை இந்திய மத்திய அரசு தெரியப்படுத்த வேண்டும்

இந்திய அதிகாரிகள், விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பாரதும் கருத்துக்கள் உள்ளது, உள்ளபடியாக தமிழ் நாட்டு மக்களுக்கு மத்திய அரசு தெரியப்படுத்த வேண்டும்.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் இப்படித் தெரிவித்தார்.

இரு தரப்பாருக்கும் இடையே என்ன பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன, அவை எந்தக் கட்டத்தில் இருக்கின்றன, சமரசம் இறுதிவடிவம் பெறுமல் இருப்பதற்கு எந்த நிபந்தனை முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பன போன்ற விஷயங்களை இந்திய அரசின் சார்பில் பொறுப்புள்ள யாராவது தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் சொன்னுர். (ஒ-)

### பி. பி. சி. செய்தியாளர் யாழ் நகரில்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பி. பி. சி. கொழும்புச் செய்தியாளர் திரு. கிறிஸ் நட்டால் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு நிகழ்ச்சிகளை தயாரிக்கவே இங்கு வந்துள்ளதாக அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

திங்கட்கிழமை வரை இங்கு தங்கி இருக்கும் அவர் பல முக்கிய பிரமுகர்களையும் பொதுமக்களையும் சந்தித்து உரைக்கோவை ஒன்றைத் தயாரிக்கவுள்ளார். (ஒ-6)

### மடுல்சீமயில் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 17

நேற்று அதிகாலை 1.40 மணியளவில் 25 பேர் கொண்ட ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று மடுல்சிமரயில் நிலையத்தைத் தாக்கியதாக அறிவிக்கப்பட்டது.

காவலுக்கு நின்ற இரண்டு பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு அவர்களிடம் இருந்த துப்பாக்கிகளை அக்கோஷ்டி பறித்துச் சென்றது என்றும் அறிவிக்கப்பட்டது. [ஒ-எ]

### வடமராட்சியில் தூரதர்ஷன் குழு

வடமராட்சி, ஜூலை 17

தூரதர்ஷன் குழு ஒன்று நேற்று வடமராட்சிக்கு விஜயம் செய்தது.

இந்த குழுவுக்கு பேட்டியளிக்க ஒரு சிலரே முன் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

முக்கிய பிரமுகர்கள் சிலர் இக் குழுவுக்கு பேட்டியளிக்க மறுப்புத் தெரிவித்தனர் என்று சொல்லப்பட்டது. (ஒ-160)

### வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ஜூலை 17

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினுல் வழங்கப்பட்ட உணவு நிவாரணப் பொருள்களுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றவர்கள் இதுவரை நிவாரண உணவுப் பொருள்களைப் பெருவிடில் உடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

### மக்கள் வங்கி அறிவித்தல்

### மாங்குளம் கிளை

மேற்படி கிளை 18-7-88 திங்கள் காலை 10.00 மணிக்கு மீண்டும் மாங்குளம் தபால் கந்தோர் கட்டடத்தில் இயங்க ஆரம்பிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கூட்டுறவுச் சங்கங்களும், ஏனைய வாடிக்கையாளர்களும் தொடர்ந்தும் இக் கிளைக்கு ஆதரவு நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மு. கணேசசுந்தரம்
பிரதேச முகாமையாளர்,
(வட பிராந்தியம்)

14-7-88

(C 5876)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நாரந்தனையில் பண்ணை வீதியில் ஒன்பதாம் கட்டைக்கு அண்மையில் அல்லில் எனப்படும் பதினாறு பரப்புத் தோட்ட வயற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 27, மவுன்காமல் வீதி, யாழ்ப்பாணம். (5071)

நுணாவில் சந்திக்கருகாமையில், ரேட்டுக்கரையில் 4½ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட கல்வீடு உடனடியாகவிற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். க. பரமசாமி, ஆறுமுகம் லேன். நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (4942)

பொமரேனியன் வெள்ளை நிறக்குட்டிகள் தடுப்பூசி போடப்பட்டு பூச்சிமருந்து கொடுக்கப்பட்டு உடன் விற்பனைக்கு உண்டு. நாராயணா விறகு மரக்காலை ஆடிய பாதம் வீதி, கேணியடி வைரவர் கோவிலடி திருநெல்வேலி. (5069)

Cull Birds முட்டை இட்டு இளைத்த இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் தரப்படும். Nallur Farm Centre, C/o Nallur Video Centre, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (5068)

நல்ல நிலையிலுள்ள 6 Sri Morris Oxford வாகனம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 119, பருத்தித்துறைவீதி, நல்லூர். இந்து விடுதி முன்பாக. (5065)

GOLDI Sausages எல்லாவகையான Sausages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C.5624]

## மலிவு விற்பனை

அலுமினிய தொழிற்சாலையில் பழுது அடைந்த பாத்திரங்கள் மலிவு விலையில் கொடுக்கப்படும். 16-7-88 தொடக்கம் 18-7-88 வரை. முகவரி: ''பேள் உலோகத் தொழிற்சாலை'' 60, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவில் – வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (4949)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள புரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன் கொக்குவில். மயூரா பாம் விற்பனை நிலையம் முன்பாக சாவகச்சேரி, மகேஸ்வரி ஹோட்டல் முன்பாக கரடிப்போக்கு பாலத்தடி, கிளிநொச்சி. (4885)

Prima Lohmann வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள் Hy-Line வெள்ளை கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன்முன்கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (C5626)

## இறைச்சிக் கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர் (சி 5625)

## ஒரு நாள் குஞ்சு விநியோகம்

ஒரு நாள் (SHETNA B-380) பேட்டுக் குஞ்சு, குறுகிய காலத்தில் கூடிய நிறை தரக்கூடிய சேவல் குஞ்சுகள், புரொயிலர் குஞ்சுகள் 22-7-88 இல் விநியோகிக்கப்படும். —R. S. K Farm: முருகபதி, உடுவில், குபேரன்ஸ்ரோர்ஸ் கொக்குவில்சந்தி, கொக்குவில். (4928)

## கோழிக்குஞ்சுவிற்பனை

ஒருநாள் (Tetra- SL) பிறவுண் சேவல் பேட்டுக் குஞ்சுகள் (Christombu) Golden Comet பிறவுண் சேவல், பேட்டுக்குஞ்சுகள் ஆடி 19ஆம், 20ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். 250சேவல் குஞ்சுகளுக்குமேல் எடுப்பவர்களுக்கு விலை 4 ரூபா/– R.S.K. Farm'முருகபதி' உடுவில் (டச்சுரோட், மான்ஸ் பாடசாலைக்கு அருகாமை) (4927)

## சுத்தமான புரொய்லர் கோழிவிற்பனை

புரொய்லர் முழுத் தோல் உரித்த கோழி விற்பனைக்குண்டு, கிலோ ரூபா 65/–. இரவு 7–30 வரை திறந்து இருக்கும். யாழ். சைனீஸ் ரெஸ்ரோரண்ட் Pvt லிமிடெட், 1 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4919)

## கண்ணாடி அலுமாரி

புடவை விற்பனை நிலயத்திற்கு தேவையான மரத்தால் செய்யப்பட்ட அலுமாரிகள், கண்ணாடி அலுமாரிகள் புதியது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- 4 நியூ மார்க்கட் ரஞ்சனுஸ் ரெக்ஸ் சுன்னகம். (C/5785)

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

முள்ளானை இளவாலையில் வீடும் தோட்டக் காணியும் விற்பனைக் குண்டு. இளவாலை கொன்வென்டுக்கு அருகாமையில் 2 பரப்பு 1 குழி விஸ்திரணமுள்ள சகல வசதிகளுடன் அமைந்த வீடும், வீட்டுக்கண்மையில் 11 பரப்பு தோட்டக்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு சி. நடராசா மேற்பார்த்து அ. கந்தையா, 'ஏரம்', மணிக்கரை, அளவெட்டி. (4916)

## காணி விற்பனை

யாழ்/மருத்துவக் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள கோணமலை வைரவர் கோவில் ஒழுங்கையில், 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. முழுவிபரங்களுக்கு:– பொ. நடராசா, 64, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு. கொக்குவில். [4934]

வேலணைகிழக்கு முத்துமாரியம்மன் கோவில் ரோட்டில் 10 பரப்புக் காணியும் எட்டு அறை கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சோமநாதன் 369/2 நாவலர் ரோட் யாழ்ப்பாணம் அல்லது M. நவரெத்தினம் 14A, வித்தானைவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (4996)

கொக்குவில் கிழக்கு கோணமலை வைரவர் கோவில் ஒழுங்கையில் உள்ள துர்க்கை அம்மன் கோவிலுக்கு அருகில் சகல வசதியும் கொண்ட 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு விலாசம்:– V. பாலசுப்பிரமணியம், அபோத்தி, பலாலி ரோட், கோண்டாவில் கிழக்கு. (4941)

## காணி விற்பனை

உடுவில் மகளிர் பாடசாலைக்கு 200யார் தூரத்தில் டச்ரோட்டில் சகல வசதி கொண்ட 4 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு விலாசம்:– J. T. வின்சிலோ C/o டாக்டர் செல்வச்சந்திரன், மானிப்பாய் ரோட், உடுவில். (4935)

அச்சுவேலி தொழில் பேட்டை வீதியில் (சங்கானை ரோட்டுக்கு அண்மையில்) 9 பரப்புக் காணி சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் தொடர்பு கொள்ளவும். முகவரி:– B. M. ஜோர்ஜ் 'புனித வின்சன்ட் டீ போல்' விற்பனை நிலயம்,பெரிய கோவில் யாழ்ப்பாணம் அல்லது 57 கோவில் வீதி யாழ்ப்பாணம். (4937)

## FLOOR POLISHER FOR SALE

Hoover Two Brush Floor Polisher Almost New உடன் விற்பனைக் உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி A. மாசிலாமணி, இராமலிங்கம் வீதி, முட்மாவடி (சங்கக்கடை அருகாமையில்) (4938)

## வீட்டுப்பாவனைப் பொருள் விற்பனை

குளிர்பான பெட்டி, Hallset சாப்பாட்டு மேசை, கட்டில், அலுமாரி, Dressing table, Show Case. (கடைகளுக்கு) கதிரை மேசைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:– பரம்தில்லைராஜா, 150 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (K. K. S. வீதிக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில்) (4914)

## மீன் பிடி உபகரணம் விற்பனைக்கு

சீ-நோர் (காரைநகர்) 17½ பிளாஸ்ரிக் படகு ஒன்று; சுப்பர் பிளாஸ்ரிக்படகுஇரண்டு; யமகா வெளி இணைப்பு இயந்திரம்(8 HP) ஒன்று;யோன்சல் (6 HP) இரண்டு; 21x7'' வலைகள் 14 பீஸ்; 9x3½'' வலைகள் 20 பீஸ்; 6x2¼x150 (அடை வலைகள்) 24பீஸ் மற்றும் தூண்டி வலையும் கைவசம் உண்டு. தொடர்பு:– M. K. செல்வத்துரை, வேல் வீதி, மயிலிட்டி. (4936)

## புரொயிலர் (Broiler) இறைச்சி விற்பனை

புரொயிலர் (Broiler) இறைச்சி எப்பொழுதும் குறைந்த விலையில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். R. S. K Farm முருகபதி உடுவில்; R. S. K. Farm தபால் கந்தோர் வீதி, மானிப்பாய். தொகையாக எடுப்போருக்கு சலுகை வழங்கப்படும். (4929)

## TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும்,விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna. Samy & Co Shabra அருகாமையில். (C5300)

## கல்வி

G. C. E (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 20 வருட அனுபவமுள்ள ஆசிரியரால் புதிய, பழைய திட்டத்திற்கு அமைய ஆரம்ப அறிவிலிருந்து விஷேடசித்திக்கு 2 மாதத்திற்குள் சகல போசன்களும் நிறைவேற்றப்படும். K. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (4931)

## மிருதங்க வகுப்புக்கள்

மிருதங்க வித்துவான் க. ப. சின்னராசா அவர்களால் மேற்படி வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் சுன்னாகத்தில் நடாத்தப்படுகின்றன. சேரவிரும்புவோர் க.சின்னராசா, மயிலணி, சுன்னாகம்; எ நீட்ஸ், K. K. S ரோட், சுன்னாகம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (C/5798)

## A/L 90 இரசாயனம் ஆரம்பம்

ஆசிரியர் சத்தீஸ் 108, பிறவுண் ரோட், A/L 90 இரசாயனம் பிரிவு I ஆரம்பம் [18–7–88] திங்கள் 6–30 காலை; பிரிவு II ஆரம்பம் திங்கள் [18–7–88] 5.00 மாலை. [4907]

## வீடு குத்தகைக்கு

K. K. S வீதிக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் நாவலர் வீதியில் வீடு ஒற்றிக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: பரம் தில்லைராஜா, 150, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். (4915)

## தவறிவிட்டது

ஞானிப்பிள்ளை குணரத்தினம் ஆகிய எனது மோட்டார் வாகன லைசென்ஸும் அதனுள் இருந்த தேசிய அடையாள அட்டையும் மானிப்பாயிலிருந்து வந்தமினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5070)

# A/L 90

சனி, ஞாயிறு வகுப்பு

1.15: பிரயோக கணிதம்

2.30: தூய கணிதம்

ஆரம்பம்: 23. 7. 88

ஆசிரியர்: திரு. ரவி மோகன் யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

(5048)

## வெளிவந்துள்ளது!

G.C.E. A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் G.A.Q., B.A. மாணவர்களுக்கும் அரசியலை அறிந்து கொள்ள விரும்புபவர்களுக்கும் ஏற்றவகையில் எழுதப்பட்ட நூல்

**'அரசியல் மூலத்தத்துவங்கள்'**

விலை ரூபா: 30/-

ஆசிரியர்:

அம்பலவாணர் சிவராஜா M.A.
(சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்)

வெளியீடு:

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், (C5868)

## ஈராண்டு நினைவஞ்சலி



தியாகசீலன்
சூசைப்பிள்ளை ஆசீர்வாதம்
(ஜெகா)

பிறப்பு:- 03-09-1962 இறப்பு:- 17-7-1986

முல்லையின் புயலே
நீயுதிர்ந்து போயிரண்டு
ஆண்டு தீர்ந்து போனதென்ன?
ஜெகா,
ஜெயத்திற்கு நீயுழைத்தாய்
ஜெகம் உன்னை உண்டதென்ன?
தாய், தந்தை, தம்பிமார்கள்
தனியவா கலங்குகின்றோம்
என்பது போல்
நீள்குலமே கலங்குதுவே
நெடுமண்ணே மூச்செறியுதே.........
உன் கனவு மலரட்டும்!

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரங்கள்,
உறவினர்கள்.

(5323)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## 1. Saudi Arabia: சவூதி அரேபியா:

**Saudi Operation & Maintenance Company Limited**

S. O. M. C.

| | | |
|---|---|---|
| 1. Electrician | — | SR 600 |
| 2. Mechanic | — | SR 600 |
| 3. A/C. Technician | — | SR 700 |
| 4. Electrical Engineer | — | SR 2000 |
| 5. Plumper | — | SR 600 |
| 6. Drivers | — | SR 600 |
| 7. Masons | — | SR 600 |
| 8. Carpenters | — | SR 600 |
| 9. Eletronic Techniciau | — | SR 700 |
| 10. Telephone Technician | — | SR 600 |
| 11. Telephone Operetor | — | SR 700 |
| 12. Power Plant Operetor | — | SR 700 |
| 13. Power Plant Mechanic | — | SR 700 |
| 14. Power Plant Electrician | — | SR 700 |
| 15. Painter | — | SR 600 |
| 16. Welder | — | SR 600 |

**WITH FOOD ALLOWANCE**

Age - 21 - 49 years

**FLIGHT: 15-9-88 க்கு முன் பயணம்**

## 2. Kuwait: குவைற்:

**United Shiping Company Cleaners**

300 Vacancies - Salary 30 K.D

மேற்படி விபரம் அறிய உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**T.V. TRAVELS & TOURIST**
**BROWN ROAD, (Railway Station Front) KOKUVIL.**

(C 5869)

# ஈழகுல மக்களே!

## உங்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

* உங்கள் கலர்ப் படப் பிரதிகளை யாழ்ப்பாணத்திலேயே மிகமிகக் குறுகிய காலத்தில் பெற எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
* இலங்கையில் முன்னணியில் திகழும் FOTO COLOR LABORATORIES (CEYLON) LTD., உங்கள் நலன் கருதி எங்களை யாழ் மாவட்டப் பிரதிநிதியாக நியமித்துள்ளார்கள்.
* உங்கள் மனத்திருப்திக்கு ஏற்ப மிகவும் அழகாகவும் தெளிவாகவும் கலர்ப் படப் பிரதிகள் GLOSSY / MATT தாள்களில் நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்து கொடுக்கப்படும்.
* **கலர்ப் படச் சுருள்கள் கழுவுதல் முற்றிலும் இலவசம்!**
* ஒவ்வொரு பிரதிக்கும் அறவிடப்படும் கட்டணம்: **4 ரூபா 75 சதம் மட்டுமே!** உங்கள் படச் சுருள்கள் விமானம் மூலம் அனுப்பி மூன்று நாட்களுக்குள் கையாளப்படும்.
* **உங்கள் அபிமான பிரதி ஒன்று முற்றிலும் இலவசமாக 5 x 7 அங்குல அளவு ENLARGE செய்து கொடுக்கப்படும்.**

**Foto Color**
Laboratories (Ceylon) Ltd.,
50, 1st Floor, Hyde Park Corner,
COLOMBO - 2.

***MACK TRAVELS***
8, First Lane, Point Pedro Road,
J A F F N A.

(C 5799)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலிருந்து வரும் பம்பாய் வெங்காயத்தால்

## வடபகுதி உற்பத்தியாளர் நஷ்டம்

### சங்கத் தலைவர் கவலை

யாழ்ப்பாணம் ஜூலை 17

வட பகுதியில் தற்போது பம்பாய் வெங்காய அறுவடை நடைபெற்றுவருகிறது, இந்த வேளையில் கொழும்பிலிருந்தும் ஏராளமான பம்பாய் வெங்காயம் இங்கு கொண்டு வரப்படுகிறது. இது நமது விவசாயிகளின் பொருளாதார நிலையை மழுங்கடிக்கக்கூடிய செயலாகும்.

யாழ் பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. என். குகராஜா மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

நமது விவசாயிகள் பலவித நெருக்கடிகளின் மத்தியில் இந்த பம்பாய் வெங்காயச் செய்கையை மேற்கொண்டு வருகின்னர்.

கடந்த காலப் பகுதியில் பம்பாய் வெங்காயத்தை அறுவடை செய்து கொழும்புக்கு ஏற்றி அதிக வருவாய் பெற்று வந்தனர்,

ஆனால் அண்மைக் காலத்தில் இலங்கை அரசு வெளிநாட்டில் இருந்து பம்பாய் வெங்காயத்தை பெருமளவில் இறக்குமதி செய்துள்ளது. இதனால் வடபகுதி பம்பாய் வெங்காயத்திற்கு கொழும்பில் நல்ல விலை கிடைப்பது குறைந்துள்ளது.

இதனால் நமது விவசாயிகள் கொழும்புக்கு வெங்காயம் ஏற்றுவது தடைப்பட்டுள்ளது.

அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட பம்பாய் வெங்காயம் கொழும்பில் இருந்து வடபகுதிக்கும் கொண்டுவரப்படுகிறது.

இதனால் இங்கு உற்பத்தியாகும் பம்பாய் வெங்காயத்திற்கு உள்ளூரிலே தகுந்த சந்தை விலை கிடைக்காமல் போகின்றது,

எனவே வர்த்தகர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இது விடயத்தில் கவனமெடுத்து இவ்வாறு பம்பாய் வெங்காயம் இங்கு கொண்டு வரப்படுவதை தடுக்க வேண்டும்.

உள்ளூர் உற்பத்திகளுக்கு தகுந்த சந்தை விலையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி அவர் கேட்டுக் கொண்டார். (இ-9)

## படையினர் எடுத்துச் சென்ற
# மினிவான்கள் மீண்டும் ஒப்படைக்கப்பட்டன

வடமராட்சி, ஜூலை 17

பருத்தித்துறை மினிவான்கள் சில அமைதிப் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த புதனன்று நடைபெற்ற இந்த சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:—

மினிவானில் மறைந்த போராளி ஒருவருக்கு அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தனவாம்

அதனை அவதானித்த படையினர், மேற்படி மினிவான்களை எடுத்துச் சென்றனர். அவற்றின் சாரதிகளை விசாரித்தனர்,

சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட தன் காரணத்தைக்கேட்டுஅறிந்த படையினர் சுவரொட்டிகளை அகற்றியபின்னர் அவற்றைப் போக அனுமதித்தனர். (உ-க-160)

## மேக நோய் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை குடா நாட்டில் குறைந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணமாவட்டத்தில் மேக நோய்களுக்குச் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இந்த வருடத்தின் ஆறு மாதங்களிலும் சராசரி சுமார் 20 பேர் மாதாந்தம் மேக நோய் சார்ந்த ரோகங்களுக்குச் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள்.

இது 1986, 1987 ஆம் ஆண்டுகளை விடக் குறைவானது என அறியப்படுகிறது. அந்தக் காலங்களில் மாதாந்தம் சராசரி 30 முதல் 40 வரையானோர் மேக நோய்களுக்குச் சிகிச்சை பெற்றனர்.

1983க்கும் 86க்கும் இடைப்பட்ட காலங்களில் வெள்ளை நோய் (Gonorrhoea), வெட்டை நோய் (Syphilis) ஆகிய ஆபத்தான ரோகங்களுக்குச் சிகிச்சை பெற்றோர் எண்ணிக்கை கூடவாக இருந்தது. இப்போது அந்த ரோகங்களுக்காகச் சிகிச்சை பெற வருவோர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது.

20—30 வயதெல்லைக்கு உட்பட்டவர்களே இப்போதும் மேக நோய்க்குச் சிகிச்சைக்கு வருவதாகச் சொல்லப்பட்டது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் மட்டுமே ஒரு சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது. (அ-10)

## பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 17

தாவடியூர் பண்ணிசைச் செல்வன் இ. திருஞானசம்பந்தன் தேவார வகுப்புகளை திருநெல்வேலி கலாமன்றத்தில் ஆரம்பித்துள்ளார்.

# விமானத் தாக்குதல் சம்பவம் குறித்து
## முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்

கொழும்பு ஜூலை 17

290 ஒன்றுமறியாத பிரயாணிகளை ஏற்றிச் சென்ற ஈரானுக்குச் சொந்தமான ஏ-300 ஏயர் பஸ்ஸை அண்மையில் அமெரிக்கா சுட்டு விழ்த்தியது ஓர் காட்டுமிராண்டித் தனமான செயல். ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் இச் செயலைக்கண்டிக்கிறது''.

முஸ்லீம் காங்கிரஸின் தலைவர் எம். எச். சேகு இசாடீன், காங்கிரஸின் சார்பில் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சீனாவில்அமெரிக்க ஆதரவுடன் இயங்கிய குவோமின்ரோங் படை தோற்கடிக்கப்பட்டது; லெபனானில் அமைதிகாக்கும் படையென்ற பெயரில் புகுந்து கேவலமான முறையில் பின் வாங்கியது; லிபியாவைத் தாக்கியது! நிக்கராகுவாவில் பயங்கரவாதிகளுக்கு உதவிபுரிந்தது; ஆப்கானிஸ்தான் பனாமா ஆகிய நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டது. ஈற்றில் வளைகுடாவுக்குள் நுழைந்து 290 ஒன்றுமறியாத அப்பாவி மக்கள் பிரயாணம் செய்த ஏ-300 ஏயர் பஸ் ஒன்றை சுட்டு வீழ்த்தியவை போன்ற செயல்கள் யாவற்றையும் உலகம் அறிந்திருக்கிறது.

வளை குடாவில் ஆராணுவ கடற்படை விமானப்படைத் தளங்கள் யாவும் அகற்றப்பட்டு ஈராக் ஈரான், நாடுகள் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டுமென்று ஐநாவைக் கோருவதற்கு நல்லெண்ணம் கொண்ட சகல மக்களும் முஸ்லீம் காங்கிரசுடன் இணைந்து குரலெழுப்ப வேண்டும்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

# ஓய்வூதியக் கொடுப்பனவில் முரண்பாடுகள் எனப் புகார்

## அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை17

அரசாங்க ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் காணப்படும் முரண்பாடுகள், பாகுபாடுகள் பற்றியும், ஓய்வூதியம் பெறுவோருக்கு வாழ்க்கைச்செலவுப்படிகொடுக்காதது பற்றியும்குறிப்பிட்டு தென்மராட்சி ஓய்வூதியம் பெறுவோர் சங்கம், பொது நிர்வாக அமைச்சருக்கும் மகஜர் அனுப்பியுள்ளது.

பிரஸ்தாப சங்கத்தின் காரியதரிசி திரு. எஸ். கே. குலசேகரம் ஒப்பமிட்ட மேற்படி மகஜரில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.

1-10-1969 தொடக்கம் ஓய்வு பெற்றவர்கள் ஒரே திரட்டப்பட்ட சம்பள விகிதத்தில் ஓய்வு பெற்றவர்களாவர். இது அப்படியிருக்க 1978 ஜனவரி முதல் திகதி தொடக்கம் நடைமுறையிலிருந்த அனுமானிக்கப்பட்ட அடிப்படைச் சம்பளத்துக்கும் திரட்டப்பட்ட சம்பளவிகிதத்துக்கும் அமைய இரண்டு பிரிவுகளாக ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அடங்கியதோர் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்டுள்ளோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே மேற்படி நியாயமற்ற செயல்கள் யாவும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலக்கிய மன்ற ஆரம்ப விழா

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய சிரேஷ்ட மாணவர்களது கவின் கலை இலக்கிய மன்ற ஆரம்ப விழா வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெற்றது.

நல்லூர் வட்டார கல்வி மூலவள அலுவலகர் திரு. பி. நடராசா பிரதம அதிதியாகக் கலந்து பயிற்சியும் உயர்ச்சியும் என்ற தலையங்கத்தில் சொற்பொழிவாற்றினார்.

மன்றத் தலைவராக செல்வன் இ. கணேசநாதன் செயலாளராக செல்வி பா. விஜித்தா தெரிவு செய்யப்பட்டனர்.

தவணை தோறும் ''ஜாக்ஞோதயம்'' என்னும் கையெழுத்துச் சஞ்சிகை வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மன்றப் பொறுப்பாசிரியர்களாக திருமதி பி. பற்பநாதனும் திரு. எஸ். ஜெயசோதிவரதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கோண்டாவில் மருந்துவமனையில் உருவப்படங்கள்

யாழ்ப்பாணம் ஜூலை 17

கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது அகால மரணமடைந்த திருமதி நாகேஸ்வரி பாலசுப்பிரமணியம், திருமதி பரமேஸ்வரி ஜீவரத்தினம் ஆகியோரது உருவப் படங்களை கோண்டாவில் மருத்துவ மனையில் மாவட்ட நோய் பரவு வியல் நிபுணர் டாக்டர் சி. விஜயராஜா திறந்து வைத்தார்.

பேராசிரியர் டாக்டர் சிவஞானசுந்தரம் திரு. சிவகுருநாதன், டாக்டர் திருமதி பொன்னம்பலம், டாக்டர் ந. சிவராஜா, டாக்டர் பாலகிருஷ்ணன் சுகாதார போதனாசிரியர் திரு. வைத்தீஸ்வரன், கிராம சேவை உத்தியோகத்தர் திரு. கனகலிங்கம் மருத்துவ மாது செல்வி யோகம்மா ஆகியோரும் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

பொது சுகாதார பரிசோதகர் திரு. சு. தங்கதுரை நன்றியுரை செலுத்தினார்.

(இ)

## ஸ்ரீலங்கா இராணுவ முகாம் மூடப்பட்டது

திருகோணமலை, ஜூலை17

மூதூர் கட்டை பறிச்சான் கிராமத்தில் இதுவரை இயங்கி வந்த ஸ்ரீலங்கா இராணுவ முகாம் சென்ற கிழமை மூடப்பட்டுள்ளது.

இதேவேளை மூதூர், தோப்பூர், நீலப்பொல, கிளிவெட்டி, அலிஒலுவ ஆகிய பகுதிகளிலுள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் தொடர்ந்தும் இயங்குகின்றன.

(இ-150)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பகோணத்தில் வாங்கிய அடிக்கு குற்றாலத்தில் வந்து மீசை தடவுகிறார்!

## ராஜீவ் குறித்து காளிமுத்து கிண்டல்

சென்னை, ஜூலை 17

நிதி வசூல் செய்யும் ஜெயலலிதா கும்பல் ப. சிதம்பரம் கண்ணில் படவில்லையா? கண்ணாடி மாற்றவேண்டுமா? என்று காளிமுத்து காட்டமாக கேட்டுள்ளார்.

காளிமுத்து விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

**தேர்தல் தோல்வி கனவிலும் அலற வைக்கிறது**

கும்பகோணத்திலே வாங்கிய அடிக்கு குற்றாலத்திலே வந்து மீசையைத் தடவுவது போல் அலகாபாத்திலே அடிவாங்கிய காங்கிரசின் தலைவர் ராஜீவ் காந்தி அருந்தமிழ் நாட்டிலே வந்து முழக்கமிடுகின்றார்.

கலக்கத்தை மறைக்க ''கர்ஜனை'' செய்கிறார். நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் எழுந்து நிற்க முடியாத அளவு இடுப்பெலும்பு முறிந்துவிட்டது! அதிலும் அலகாபாத் தோல்வி காங்கிரசை கனவிலும் அலற வைக்கிறது.

உழுகிற மாடானால் உள்ளூரில் விலை போயிருக்கவேண்டும். அங்கே விலைபோகாததை தமிழ் நாட்டு மக்கள் தலையில் கட்டப்பார்க்கிறார் இந்தியப் பிரதமர்.

**காங்கிரஸ் நெற்றியில் நாமம்**

வி. பி. சிங்குக்கு எதிராக காங்கிரஸ் ரூபா 5 கோடி செலவு செய்தது என்கிறார் தேவிலால். கோடிகளை கொட்டியும் கொடுமை பல இழைத்தும் வி. பி. சிங்கின் வெற்றியை தடுக்க முடியவில்லை காங்கிரஸால்.

தமிழ்நாட்டில் மட்டும் பணத்தை விதைத்து வாக்குச்சீட்டுகளை அறுவடை செய்யலாம் என கருதலாமா! காங்கிரஸ் நெற்றியில் பெரிய திருநாமம் போட திருமண் குழைக்கிறது தமிழ் நாடு. நேர்மையான ஆட்சியைக் காங்கிரஸ் தான் தரும் என்கிறார் பிரதமர்.

போபர்ஸ் சிரிக்கிறது. போபக்ர்ஸ் நகைக்கிறது. சுவீஸ் வங்கி புன்னகை பூக்கிறது. பிரதமரின் பேச்சைக் கேட்டு நேர்மை குறைவான காங்கிரசும் ஒழுக்கக் கேடான ஜெயலலிதா கோஷ்டியும் மக்கள் வீழ்த்த வேண்டிய இரு இலக்குகளாக ஏற்கனவே முடிவு செய்தாகிவிட்டது.

வில்லை வளைத்து— மீசை முறுக்கிச்சினந்து— அம்பையும் எய்தபின்— குறுக்கே பாய்ந்து தடுக்க எவரால் முடியும்? காங்கிரசையும்— காங்கிரஸை கடைக்கண் பார்வையால் சொத்திக் குதறிக் கொண்டிருக்கும் ஜெயலலிதா கோஷ்டியும் தமிழகத்தை இப்போதே ஒழுக்க சிதைவுக்கும் சீர்கேட்டுக்கும் ஆளாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடுவதற்கில்லை.

**தேர்தல் நிதி: ஜெயலலிதா கண்ணில் படவில்லையா**

எதிர்க்கட்சிகள் வசூலிக்கும் தேர்தல் நிதி பற்றி விசாரிக்கப்போவதாக தாவிக் குதிக்கிற சிதம்பரத் தாண்டவராயருக்கு ஜெயலலிதா கும்பல் கண்ணில் படவில்லையா! கண்ணாடியை மாற்றவேண்டுமா! அது கோடிகளைத் தாண்டு மளவு நிதி வசூலித்ததாக சொல்கிறதே! அது பற்றி சிதம்பரம் மூச்சு விடாதது ஏன்! அது பற்றி விசாரணை வைக்க சிதம்பரம் முன் மொழிந்தால் அவரது அமைச்சர் பதவிக்கே ஆபத்தா?

**எம். பிக்கு 5 லட்சம்**

தங்கராஜ் எம். பிக்கு— ஜெயலலிதா கோஷ்டி ரூபா 5லட்சம் கொடுத்த புகாரில் விசாரணை நடக்கவில்லையா இன்னும்! விசாரணை முடிந்து குற்றவாளி எவர் என்பது துல்லியமாக முடிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவது மட்டும் ஊறுகாய் பானையில் போடப்பட்டு விட்டதாக அறிகின்றேன்.

நேர்மையான ஆட்சி நடத்தப் போவதாக பீரங்கியாக முழங்கும் பிரதமர் – ஜெயலலிதா பற்றிய குற்றச்சாட்டை மட்டும் நீர்மூழ்கிக்கப்பலாக மறைப்பானேன்.

**கவர்னர் ஆட்சியை வரவேற்பதா?**

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி இருந்தால் தப்பிக்க முடியாத அந்த முதலைகள் கவர்னர் ஆட்சிக்குள் சுகவாசம் செய்கின்றன! அந்த முதலைகள் சொல்வதை தான் மக்கள் சொல்வதாக கவர்னர் ஆட்சியை வரவேற்பதாக பிரதமர் சொல்கிறார். எப்படியோ பொழுது விடியும் காங்கிரசின் திருட்டுக் கணக்கு அம்பலத்திற்கு வரும்! திருடர்கள் தப்பமுடியாது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## வைத்திய சேவையாளராக நியமிக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

சுகாதார அமைச்சினால் பதிவுசெய்யப்பட்ட வைத்திய சேவையாளர் தரத்துக்கு விசேஷதரப் பதவி உயர்வுபெற்ற 20 பேரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் அதிக எண்ணிக்கையானோர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் யாழ்சுகாதாரத் திணைக்களத்துக்கு வந்துசேர்ந்த தமிழர்களின் பெயர்கள் மட்டும் கீழே தரப்படுகின்றன.

திரு. எம். ஏ. ராஜரத்தினம் (யாழ்ப்பாணம்), மீ. கிருஷ்ணபிள்ளை (யாழ்ப்பாணம்), எஸ். பத்மநாதன் (யாழ்ப்பாணம்), கே. ஆறுமுகம் (அனுராதபுரம்), கே. பூர்ணலிங்கம் (புத்தளம்), கே. இராமநாதன் (யாழ்ப்பாணம்), ரீ. சபாபதிப்பிள்ளை (வவுனியா), வீ. பத்மதாஸ் (வவுனியா), கே. பாலகிருஷ்ணன் (யாழ்ப்பாணம்), எம். கந்தையா (கம்பஹா), எம். கந்தசாமி (யாழ்ப்பாணம்), வீ. ஏகாம்பரம் (மொனராகலை), என். கந்தையா (யாழ்ப்பாணம்), எம். சதானந்தன் (யாழ்ப்பாணம்), வீ. வெற்றிவேல் (யாழ்ப்பாணம்), எம். சிவநேசன் (நுவரெலியா), எஸ். கிருஷ்ணன் (யாழ்ப்பாணம்), வீ. பசுபதி (யாழ்ப்பாணம்). (இ-9)

### அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூலை 17

யாழ் மாவட்ட கிராமிய கடற்றொழில் சமூகஅபிவிருத்திஅமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

யாழ் குருநகர் புனித யாகப்பர் சந்தியோகுமையோர் தேவாலய பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு அருட் திரு. பி. எம். இம்மானுவல் அடிகளார் தலைமை வகிப்பார். (க-சி)

### இன்று கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூலை 17

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக்கூட்டத்துக்கு சமாசத்தின் தலைவர் கலாநிதி மோகனதாஸ் தலைமை வகிப்பார். (க)

# எமது கோரிக்கையுடன் ஒப்பிடும்போது இது நிவாரணம் ஆகாது

## அமைச்சரவைத் தீர்மானம் குறித்து அடகு வைத்தோர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 17

அரசாங்கம் இற்றை வரைக்கும் எமது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காது காட்டி வந்தபோக்கில் சிறுமாற்றம் மட்டுமே ஏற்பட்டிருக்கிறது. எமது நியாயமான கோரிக்கைகளுடன் பார்க்கும்போது உண்மையில் இது நிவாரணமாகாது. ஆகவே அமைச்சரவையின் முடிவு ஒரு கண் துடைப்பாக அமையக்கூடும் என்ற அச்சம் தவிர்க்க முடியாதது ஆகும்.

சமீபத்தில் அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பாக அடகு வைத்தோர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

நாம் எமது கோரிக்கைகளில் அடகு நகைகளைக்கொழும்புக்கு எடுத்துச் சென்ற நாள்முதல் வட்டி அறவிடக்கூடாது என்றும்—

அடகு நகைகளுக்குரிய பணம்செலுத்தியோருக்கு செலுத்திய திகதி தொடக்கம் அவர்களின் அடகு நகைகள் மீளளிக்கப்பட்ட அல்லது மீளளிக்கப்படும்திகதி வரை அக்காலத்துக்குரிய வட்டியை மக்கள் வங்கி கொடுக்க வேண்டும் என்றும் —

வழக்கமாக விவசாயிகளுக்கு கொடுக்கும் கடனுக்கு அறவிடும் ஒன்பது சத வீத வட்டி விகிதமே அடகு வைத்தோரிடமும் அறவிடவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

1-1-84 இல் இருந்து— அதாவது கொழும்புக்கு நகைகளை கொண்டுசென்றதில் இருந்து — வட்டி விகிதம் குறைக்கப்படும் என்ற செய்தி வட்டி குறைத்தாலும் குறைக்காவிட்டாலும் மக்கள் வங்கியுடன் நகை அடகு வைத்த ஒப்பந்தத்துக்கு முரணானதும் சட்ட விரோதமானதும்ஆகும்.

1-1-88 முதல் வட்டி அறவிடுவதில்லை என்பது முதலிலும் பார்க்ககூடிய வட்டி அறவிடுவது சட்ட விரோதமானது என்பதற்காகவே இம்முடிவை எடுத்துள்ளனர் போலும்.

ஆகவே எமது சங்கம் ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கொழும்பில்உள்ள சட்டவல்லுநர்களுடன் தொடர்பு கொண்டு எடுத்துவரும் நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் எமது நீதியான, நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்.

ஆகவே எமது சங்கத்தில் அங்கத்தவர்களாக இல்லாதவர்களும் எம்முடன் இணைந்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகிறோம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இதன் ஒரு பகுதி ஏற்கனவே உதயனில் வெளிவந்தது.) [இ-க]

## கோப்பாயில் மின் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 17

கோப்பாய்ப் பிரதேச உப அலுவலகப் பகுதிக்குள் மின் விஸ்தரிப்புக்கென அரசாங்கம் கூடுதலான நிதி ஒதுக்கி உள்ளது.

வீதி விளக்குகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாகவும், கோப்பாய் வடக்கில் புதிய மின் உப நிலயம் ஒன்று விரைவில் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் மேற்படி உப அலவலகப் பொறுப்பதிகாரி திரு. இ. மாசிலாமணி தெரிவித்தார். (இ-160)

# தேர்த்திருப்பணிக்கு உதவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை17

கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன் ஆலய தேர்த் திருப்பணிக்கு உதவி செய்யுமாறு இந்து சமய அடியார்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத் தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர் திரு. அ. க. செல்வராசா தலைமையில் திருப்பணி வேலையின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.

சுமார் பத்து லட்சம் ரூபா செலவில் கிளிநொச்சிப் பிரதேசத்தின் முதலாவது சித்திரத் தேர் அமைப்பு வேலை இது என்பது குறிப்பிடத்தக்கது.

கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகாமணி கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் கே. துரைராசா, கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் கே. குணராசா, நிர்வாக அதிகாரி கே. வீரபத்திரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் வி. எஸ். சுவாமிநாதன், கிளிநொச்சி பிரசைகள் குழு உப.தலைவர் கே. யோகராசா, செயலாளர் ஐ. நடராசா, கிளிநொச்சி வர்த்தகர் சங்கத் தலைவர் செல்லையாசிவசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் வே. இராசேந்திரம், உப.தலைவர் அ. பாலசுப்பிரமணியம், பொருளாளர் வை. பரமநாதன், கொழும்புக் கிளைப் பொறுப்பாளர் எஸ். கனகலிங்கம் ஆகியோர் உரையாற்றுகையில் இத்தேர்த் திருப்பணிக்கு இந்துசமய அடியார்கள் தம்மாலான நிதி உதவி செய்து தேர்த் திருப்பணி சிறப்புற உதவுமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

திருநெல்வேலி சிற்பாச்சாரி ஸ்தபதி க. செல்வராசா சுப வேளையில் தேர் வேலையைத் தொடக்கி வைத்தார்.

கிளிநொச்சி வர்த்தகர் சங்கத் தலைவர் செல் [illegible] கள் அனைவருக்கும் அன் [illegible] வழங்கினார். (இ-10)

# பிறந்த தின வாழ்த்து



**செல்வன் தினேஸ் சந்திரகுமார்**

(17 – 7 – 1988)

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த சந்திரகுமார் சாவித்திரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தினேஸ் தனது 2 வது பிறந்த தினத்தை ஜேர்மனியில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை எல்லாம் வல்ல இறைவன் அருளால் சகல கலையும் கற்று சகலகலாவல்லவனைப் பல்லாண்டு காலம் வாழ ஜேர்மனி அப்பா, அம்மா கோப்பாயைச் சேர்ந்த அப்பம்மா ஜேர்மனி அத்தை, சுன்னாகத்தைச் சேர்ந்த அம்மப்பா, அம்மம்மா, சின்னம்மா, ஆசைமாமா, குட்டி மாமா, செல்லமாமா அன்றி, டென்மார்க்கைச் சேர்ந்த சிற்றப்பா, ஜேர்மனி மாமா, மாமி மச்சாள்மார், விஜிதா, ரூபா, ஜெனனி ஆகியோர் இவரை வாழ்த்துகின்றனர்.

சி. பொன்னுத்துரை
சுன்னாகம் கிழக்கு
சுன்னாகம்.

(C 5859)


**O/L Dec 88**
**DAY CLASSES**
**ஆரம்பம்: 18- 07- 88**
**Bond Institution**

58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C 5853)


# விளையாட்டரங்கு

## புதிய பாடத்திட்டத்துக்கு ஏற்ப விளையாட்டுப் போட்டி

### கோத்தணி அதிபர் பாராட்டு

கிளிநொச்சி, ஜூலை 17

புதிய பாடத்திட்டத்துக்கமைய இந்த விளையாட்டுப் போட்டியில் விளையாட்டுக்கள் ஒழுங்கு செய்யப்பட்டது இதுவே முதல் தடவை.

இந்தப் பெருமை சென். திரேசா மகளிர் கல்லூரிக்கே சேரும்.

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் பாடசாலை ஆரம்ப பிரிவுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கொத்தணி அதிபர் திரு. நா. சோதிநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அதிபர் திருமதி ப. மார்க்கண்டு தலைமையில் விழா நடைபெற்றது.

அதிபர் தலைமையுரை நிகழ்த்துகையில்; ''மாவட்ட ரீதியில் பல சாதனைகளை நிலை நாட்டியவர்கள் எனது பாடசாலையைச் சேர்ந்தவர்களே.

''தற்போதைய சம்பவங்கள் இப் பாடசாலை வளர்ச்சியில் பாதிப்புகளை ஏற்படுத்தினாலும் மாவட்டத்தின் ஒரே பாடசாலை என்ற வகையில் பெற்றோரும் நலன் விரும்பிகளும் பூரண ஒத்துழைப்பு நல்கி மீண்டும் இப்பாடசாலையை முன்னணியில் திகழ வைக்க வேண்டும்'' என்றார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், உருத்திரபுரம் கிராம சேவையாளருமாகிய திரு. சின்னத்தம்பி தனபாலசிங்கம் தமது உரையில்: ''மாணவர்களும் ஆசிரியர்களும் ஒரு ஆரம்ப பிரிவு விளையாட்டுப் போட்டியில் ஒழுங்கான முறையில் நடந்து கொண்டதை இந்தப் போட்டியில் கண்டு கொண்டேன்'' என்றார்

போட்டியில் கண்ணகி இல்லம், அருந்ததி இல்லம், வாசுகி இல்லம் என்பன முறையே 1ஆம் 2ஆம், மூன்றும் இடங்களைப் பெற்றுக் கொண்டன. (இ-76)

**சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும்**

## 35 அணிகள் மோதும் உதைபந்தாட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் 35 சனசமூக நிலைய அணிகள் பங்குபற்றுகின்றனர்.

ஏழு வீரர்கள் பங்கு கொள்ளும் ''நொக் அவுட்'' முறையிலான இந்தப் போட்டி எதிர் வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதன் இறுதிப்போட்டி இம் மாதம் 31 ஆம் திகதி இடம்பெறும்.

மேற்படி போட்டிகள் யாவும் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)


# கிளிநொச்சி நீர்வரி இடாப்புப் பதிவு செய்தல்

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மாவட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட குளங்களின் கீழ் நீர்ப்பாசனம் மூலம் விவசாயம் செய்பவர்களின் பெயர்கள் நீர்வரி இடாப்பில் பதிவு செய்யவும், திருத்தம் செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த நடவடிக்கைக்காக பின் வரும் மாதிரிப் படிவம் 'சி' இல் குறிப்பிட்டபடி 1988-07-31ஆம் திகதிக்கு முன்னர் 'அரசாங்க அதிபர் [காணி] கச்சேரி, கிளிநொச்சி' என்ற முகவரியிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

க. தேவசிகாமணி,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

படிவம் : 'சி'

## 1988ஆம் ஆண்டு நீர்வரி இடாப்பு மாற்றம்

01. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:-
02. விலாசம்.-
03. விண்ணப்பதாரர் காணியின் பங்கீட்டாளரா? குத்தகையாளரா? சொந்தச் செய்கையாளரா? சொந்தக்காரர் ஆனால் செய்கையாளர் அல்லரா? அங்கீகரிக்கப்படாத செய்கையாளரா என்பதை விபரிக்க:-
04. நீர்ப்பாசனத் திட்டத்தின் பெயர்:-
05. வாய்க்கால் இல/ பெயர்:-
06. ஒரு கூட்டை மட்டும் நிரப்புக:

| தற்போது நீர்வரி இடாப்பிலுள்ளவர்களின் பெயர்ப்பட்டியல் விடயத்தில் | தற்போது நீர்வரி இடாப்பில் உள்ளவர்களின் பெயர்ப்பட்டியல் இல்லாதவர்களின் விடயத்தில் |
|---|---|
| 1. தொடர் இல:<br>2. காணி இல:<br>3. நெற் காணியின் பெயர்: | 1. காணி இல:<br>2. நில அளவை தொடர்புக் குறிப்பு<br>3. நெற்காணியின் பெயர்: |

07. நெற் காணியின் விஸ்தீரணம்:- ஏக்கர் றூட் பேர்ச்சஸ்
08. கிராமசேவையாளர் பிரிவு:
09. பெயர் மாற்றத்திற்கான/ சேர்ப்பதற்கான காரணம்:

திகதி  கையொப்பம்

[சி5857]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நெல்வளமும் பால்வளமும் பெருகும்

# தம்பன்கடவை தமிழர்களின் கையிலிருந்து மாறிய கதை!

## திட்டமிட்ட குடியேற்றத்தின் விளைவை விளங்க வைக்கும் பரிதாப வரலாறு!!

(பகுதி ஒன்று)

சங்கிலி மன்னனின் ஆட்சியின் கீழ் பழுகாம வன்னிமையின் அதிகார எல்லைக்குள் தம்பன் கடவைப் பிரதேசம் உட்பட்டிருந்தது. மகாவலி கங்கை பழுகாம வன்னிமையின் மேற்கு எல்லையாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் 25-7-1822இல் ஏற்பட்ட கோல்புறூக் சார்ள்ஸ் கெமறன், யோண்கிரகரி ஆணைக்குழுவின் திருத்தப்படி தம்பன் கடவை, மட்டக்களப்புடன் இணைக்கப்பட்டிருந்ததும் கவனிக்கத்தக்கது.

13ஆம் நூற்றுண்டில் மகாவலி கங்கைக்கு பாலம் அமைக்கும் முன்னர், கங்கைத்துறையில் ஓடம் செலுத்தி பிரயாணிகளின் பயணத்தைத் தொடர உதவி வந்த தம்பாப்பிள்ளை என்பவரின் பெயராலேயே இப்பிரதேசம் தம்பன் கடவை என வழங்கப்படுவதாயிற் று.

பொலநறுவை மாவட்டத்தின் நிர்வாக எல்லைக்குள் தம்பன் கடவை தற்போது இணைக்கப் பட்டிருந்தாலும் சிங்கள மக்கள் வாழும் பகுதி 'மெதப்பற்று' என்றும் தமிழ் மக்கள் வாழ்ந்த தம்பன் கடவைப் பகுதி 'எகொடப்பற்று' என்றும் பிரித்து வைக்கப் பட்டே இருந்தன.

தம்பன் கடவையின் தெற்குப்பகுதியில் வேடுவர் கிராமங்களாகிய கிளிதமனை, தளுக்கானை, மில்லானை, யக்குறே, அலவாத்கும்புற என்னும் கிராமங்களில் வாழ்ந்த வேடுவ மக்களும் அண்டி வாழ்ந்த தமிழ் மக்களுடனே அவர்களும் தமிழ் மொழியையே பேசினர். தங்கள் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களாகவே வைத்துக் கொண்டனர்.

தம்பன் கடவை மக்களின் தொழில் பெரும் பாலும் விவசாயமாகவே இருந்தது. மகாவலி கங்கையின் கிளைகளிலிருந்து பாய்ந்தோடி வரும் நீர் இப்பகுதி மக்களின் நெல் வயல்களுக்கு தன்னிச்சையாகவே பாய்ந்து வளமூட்டுவதால், வேளாண்மைத் தொழில் அபரிமிதமான பலனைக் கொடுத்து வந்தது. இத்துடன் இம்மக்கள் மந்தை வளர்த்தலையும் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர் இப்போது கூடத் தம்பன் கடவை மந்தை வளர்த்தலில் முன்னணியில் இருப்பது தெரிந்ததே.

கங்கை நதி வளத்தால் வானேங்கி வளர்ந்த காடுகளும், வன விலங்குகளும் நிறைந்தேயிருந்தமையால், வேடுவ மக்களுக்கு தேனும் இறைச்சியும் தாராளமாகவே கிடைத்தன. தமிழ்

> **தொடரும் வினை**
>
> இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரும் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடருகின்றன.
>
> திருமலையில், முல்லைத்தீவில், வவுனியாவில் வளம்மிக்க தமிழர் மண் திட்டமிட்டுப் பறிக்கப்படுகிறது. 1948இல் பிரிட்டிஷ்காரர் வழங்கிய சுதந்திரத்தின் பின்னர் தொடங்கிய இந்த வினை; இன்னும் முடியவில்லை.
>
> 1956ஆம் ஆண்டின் பின்னர் தம்பன் கடவை என்ற தமிழர் பிரதேசம் எப்படிச் சிங்கள மக்களுக்குக் கைமாறியது; அங்கு வாழ்ந்த தமிழர்கள் மட்டக்களப்புக்குக் குடிபெயர்ந்தது எவ்வாறு என்பதை இந்தக் கட்டுரையில் படியுங்கள்.
>
> இரண்டாவது பகுதி 20. 7. 1988 உதயனில் வெளிவரும்.
>
> – ஆசிரியர்

பேசும் மக்கள் வாழ்ந்த பிரதேசம் சிங்கள அரசுகளால் புறக்கணிக்கப் பட்டுக் கவனிப்பாரற்றுக் கிடந்தாலும் சுயதேவை நிறைந்த பிரதேசமாகவே இருந்தது. அபரிமிதமாகக் கிடைக்கும், பால், நெய், தயிர் தேன், இறைச்சி என்பனவற்றை மலிவுவிலையில் வாங்கி பிறஇடங்களுக்கு விற்று அதிக லாபம் சம்பாதிககக் கூடிய தன்மை இருந்ததால் அது வியாபாரிகளைக் கவர்ந்திழுக்கவும் காரணமாக இருந்தது. தம்பன் கடவையில 1955 வரை இவ் வியாபாரத்திலீடுபட்டவர்களே சிங்களப் பிரசைகளாக இருந்தனர்.

**1956 இன் பின்**

மன்னம்பிட்டி, சொறிவில், புதுவெளிகட்டாமுனை, கருடபளை, துவன்

**-- த. பேரின்பநாதன் --**

பிட்டி, பத்தாவைச்சேனை முத்துக்கல, திவுச்சேனை, காண்டகாடு, வெலிக்கந்தை, மாக்குப்பை ஆகிய தமிழ்க் கிராமங்களும், அழிஞ்சிப் பொத்தானை, கட்டுவான் வில், திருக்கோணமடு, வொறவெவை ஆகிய முஸ்லிம் கிராமங்களுக்குமாக(10) பத்து தமிழ் பாடசாலைகள் இருந்தன. 1958ஆம் ஆண்டில் தான் சிங்களச் சிறுவர்களுக்கு மன்னம்பிட்டி தமிழ் வித்தியாலயத்தில் ஒரு பகுதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. 1956 இன பின்னர் சிங்கள இனவாதம் பேசிய அரசியல் வாதிகளினுல் இலங்கையில் இனவாதம் முனைப்படைந்த போது தம்பன் கடவையிலும் மாறுதல் தோன்றத் தொடங்கியது. 1960 ஆம் ஆண்டளவில் காண்டகாடு என்ற கிராமத்தில் கனேடிய அரசின் உதவியுடன் மிருக வளர்ப்புத் திட்டமொன்றை உருவாக்கி சிங்களவர்களைக் குடியேற்றத் தொடங்கியது அரசு.

தம்பன் கடவைப் பிரதேசத்தை சிங்கள மயமாக்க முனைந்த அரசு முதலில் வேடுவக் கிராமங்களில் சிங்கள மொழி மூலம் ஆரம்ப பாடசாலைகளை அமைத்ததோடு நிற்காமல் சிறு, சிறு குளங்களையும் அந்தக் கிராமங்களை அண்டி அமைத்து சிங்கள மக்களை வேட்டுவ மக்களோடு குடி அமர்த்தியது. கிளிதமனைக்குளம், தளுக்காகுளம், அல்லவெவை ஆகியனவே அக்குளங்களாகும். மேலும் மகாவெவ, கல்வெவ, சிங்காரிக்குளம் போன்ற சிறியகுளங்களையும், அறலங்கவில, பிம்புறத்தாவ போன்ற பெரிய குளங்களையும் அமைத்து சுமார் 3500 சிங்களக் குடும்பங்களைக்குடியமர்த்தினர். இது 1960 - 66 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நடந்தது.

**கைமாறியது**

இக் குடியேற்றங்களைச் செய்த பின்பு 13 வட்டாரங்களாக இருந்துவந்த தம்பன் கடவை கிராமசபையை (மன்னம்பிட்டி) மேலும் 17 வட்டாரங்களை குடியேற்றப் பட்ட சிங்களவர்களுக்கு உருவாக்கி 30 வருடங்களாக தமிழர் வசமிருந்த கிராமசபையை சிங்களவர் கைக்கு மாற்ற வழிசமைத்துக் கொண்டது.

சிங்காரிக் குளத்தைக் கட்டி வெலிக்கந்தை, மாக்குப்பை கிராமங்களை அண்டி சிங்களவர்களைக் குடியேற்றியது. அத்தோடு மாக்குப்பை பிரதேசத்தில் தமிழர்களுக்குச் சொந்தமாக இருந்த நெற்காணிகளை சிங்களவர்கள்பலாத்காரமாகப் பறித்துக் கொண்டனர். இக்காணிகள் மட்டக்களப்பைச் சேர்ந்த, வந்தாறுமூலை சித்ருண்டி, மகளின உறுதிக்காணிகளாகும்:

அல்லவெவை என்ற குளத்தை 1973–75ஆம் ஆண்டளவில் கட்டி அங்கு குடியேறிய சிங்களவர்களுககுப பாதை அமைப்பதற்காக, தமிழ் மக்களின் நெல் வயல்களுக்கு நீர் பாயும் வாய்க்காலைக் கட்டி மறுத்தனர். தமிழர்கள் எவ்வளவோ கூறியும் பலன் இல்லை, நெல் வயல்கள் பாழடைந்தது தான் கண்டபலன். இதே காலத்தில் (1973-75) கடவத்த மடுவில் வசித்து வந்த இந்திய வம்சாவழி மக்களைத் துரத்தி விட்டு அங்கே சிங்களவர்களைக் குடியேற்றி அவர்களுக்கு ஒரு குளத்தையும் கட்டிகொடுத்தனர். இதைத் தற்போதய ஐ. தே. க. அரசாங்கத்தில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருக்கும் திரு. கே. டபிள்யு தேவநாயகம் எதிர்த்தார் எனினும் ஒரு பயனும் அளிக்கவில்லை.

தொடர்ந்தும் வொறவெவவில், கல் வெல, கடவனக்குளம் ஆகிய குளங்களைக் கட்டி 350 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றினர்.

(வளரும்)

THE EXPRESS INSTITUTE KOPAY

O/L-88
Day Class
காலை 8.00-பி.ப 1.00
4 மாத தீவிர
பயிற்சி வகுப்பு
பிரிவு 1
ஆரம்பமாகியுள்ளது

வழமையான தலைத்துவம் மிக்க ஆசிரியர் குழுவினுல் ஒழுங்கான விரிவான விரிவுரைகள்
[C/5851]

கிளிநோச்சி மக்களுக்கோர் நற்செய்தி!

● உங்களுக்குத் தேவையான

* பற்றறிகளை மிகக்குறைந்த கட்டணமான 15 ரூபாவுடன் சார்ச் செய்து கொள்ளவும்,
* புதிய பலரகமான மணிக்கூட்டு வகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக கொள்ளவும், திருத்திக் கொள்ளவும்,
* றபர் ஸ்ராம்ஸ் செய்து கொள்ளவும்,
* இலங்கை, இந்திய சஞ்சிகைகள், கதைப்புத்தகங்களை, சில்லறையாகவும், ஓடர்முறையில் பெற்றுக் கொள்ளவும்,
* பாடசாலை மாணவர்களுக்குரிய கொப்பி புத்தகங்களை ஐந்து வீதக் கழிவு விலையிலும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு விசேட கழிவு விலையில் பெற்றுக் கொள்ளவும்,

● அனைவரும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

பிக்பென்ஸ் 'பி'
[BIG BENS 'B']

சிங்கர் மெசின் கம்பனி முன்பாக
கண்டி வீதி, கிளிநொச்சி.
(சி/5858)

# ஒப்பந்தத்துக்கு ஒரு வயது பூர்த்தி: சோதிட நோக்கில் அதன் எதிர்காலம்!

| | | | |
|---|---|---|---|
| ராகு | குரு | 6 | புதன் |
| 3 | 29. 7, 87 பிற்பகல் 3. 37 இலங்கை, இந்திய ஒப்பந்த ஜாதகம் | | சூரியன் செவ் சுக்கிரன் |
| 2 | | | சந்திரன் |
| ல நெப்டி | சனி யூரேனேஸ் | 11 | கேது |

| | | | |
|---|---|---|---|
| செவ் | 9 | குரு சுக்கிரன் | 11 |
| ராகு | 28. 7. 88 கோசார ரீதியில் இன்றைய நிலை. | | சூரியன் புதன் |
| 6 | | | கேது |
| சனி யூரே நெப்டி | 4 | 3 | 2 |

## செயல் வடிவம் பெறுமா? அல்லது எழுத்தளவில் மட்டும் தானு?

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்குஇன்னும் பதினெரு நாட்களில் ஒரு வயது பூர்த்தியாகிறது. ஒப்பந்தத்தின் கிரகநிலை என்ன? சோதிடர் பார்வையில் அதன் எதிர்காலம் எப்படி? விளைவுகள் எவ்வாறு இருக்கும்? தமிழர் அரசியல் நிலை எந்தளவுக்கு மாறும் என்பன குறித்து இங்கு ஆராயப்படுகிறது.

ஒரு வருட வயதை பூர்த்திபண்ணிய ஒப்பந்தம் மேலும் செயல் வடிவம் பெறுமா அல்லது எழுத்தளவில் முடங்கி கிடககுமா என்பது பற்றி ஆய்வு செய்து பார்த்தால் நவ நாயகர்களின் தீர்ப்பே முடிவானது.

1 ம் வீடு - நாட்டுமக்கள்.

4 ம் வீடு - பூமி, நிலம்

6 ம் வீடு - ராணுவம்

7 ம் வீடு - உள் நாட்டுப் பிரச்சினை

8 ம் வீடு - மரணம்

9 ம் வீடு - ஜனுதிபதி.

10ம் வீடு - அரசன் அல்லது அரசாங்ம்.

11 ம் வீடு - நாடாளுமன்றம்.

12 ம் வீடு - சிறைச்சாலை, ஒற்றர்.

ஜென்மலக்கினம்-தனு

நவாம்சலக்கினம் — மேடம்.

சந்திரலக்கினம் — சிம்மம்.

சுக்கிரமகா தெசையில் இருப்பு ஞ 8 - மாதம்.

ஒரு போர்க் குணம் படைத்த யுத்த ராசியின் (தனு) ஆரம்ப முனையில்தான் லக்கினம் பிறந்தது. லக்கினத்தில் நிற்பவர் நெப்டியூன் எனனும் வருணன். லக்கினத்திற்கு சம சப்தமத்தில் 180 பாகையில் போராளிகளுக்கு உரிய இடத்தில் புதன்.

போராளிகட்கு உரியவரான புதன் தனது 7ஆம் பார்வையில் லக்கினத்தையே பார்க்கிருர். தனுராசி குருவினுடையதாதலால் குரு IX4க் குரியவராதலும் அவர் கேந்திராதிபத்திய தோஷமுடையவர் குரு 5ம் இடத்தில் நின்ருலும் பாவத்திற்கு 4ம் இடமாகிய மீனத்தில் ராகுவுடன் இணைந்திருந்தார். குருவின் பார்வையில் லக்கினம் பலமடைகிறது. யூரனேஸ் [இந்திரன்] இன் இரு பார்வையும் லக்கினத்திற்கு உண்டு. 7ல் நிற்கும்புதன் குருவின் சாரத்தில் நிற்பதால் போராளிகளின் போராட்டம் வேறு வடிவம் எடுத்தது. சாகும் வரை உண்ணுவிரதப் போராட்டமாக மாறியது. இருந்தும் போராளிகள் தம் இலட்சியத்தைக் கைவிடமாட்டார்களென்று 22-8-87ல் சஞ்சீவியில் வெளியாகியது. ஞாபகமிருக்கலாம்.

இனி தொண்டிற்கு பிறகு ஒருவயதை முடித்த ஒப்பந்த கோசார பலனைப் பார்ப்போம்:-

6ம் இடம் ராணுவம், 7ம் இடம் உள்நாட்டுப் பிரச்சினை (போராளிகள்) இரண்டிற்கு உரியவர் சனி, சனி தற்போது பாக்கியத்தானமாகிய 5ல் வக்கரத்தில் நிற்ப

(7-ஆம் பக்கம் பார்க்க)

# உலக திருச்சபைக் கவுன்சில் ரூ. 7 லட்சம் உதவி

## அகதிகள் புனர்வாழ்வு நிதியத்துக்கு

யாழ்ப்பாணம் ஜூலை 17

யாழ்- கண்டி வீதியிலுள்ள அகதிகள் புனர்வாழ்வு நிதியத்திற்கு உலகத்திருச்சபை கவுன்சில் (World Council of Churches) 7 லட்சம் ரூபா நன்கொடையாக வழங்கியுள்ளது.

மேற்படி நன்கொடை யாழ்- மாவட்டத்தில் கடந்த காலகட்டத்தில் நடந்த அனர்த்தங்களால் காயமுற்ருேருக்கும் வீடு வாசல்களை இழந்தோருக்கும் கொடுபடவிருக்கிறது.

இந்தத் தகவலை பிரஸ்தாப புனர்வாழ்வு நிதியத்தின் பதில் தனதிகாரி திரு. எஸ். ஆர். முத்தையா தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

சமீப காலமாக வெளிநாடுகளிலிருந்து வரும் உதவிகள் குறைந்து வருகின்றன. அங்ஙனம் விண்ணப்பங்கள் கிடைத்தாலும் இவையாவும் தகுந்த முறையில பரிசிலனை செய்யப்பட்டபின்னரே பண உதவி வழங்கப்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் உதவி கோரத் தகுதியற்றவர்கள் கூட விண்ணப்பித்துள்ளனர்.

சில சமயங்களில் சிலர் ஆள்மாறாட்டம் கூடச் செய்ய எத்தனித்து கையும் மெய்யுமாகப் பிடிபட்டிருக்கிறுர்கள்.

எதிர்காலத்தில் விண்ணப்பங்கள் யாவும் தகுந்த அத்தாட்சிப் பத்திரங்களுடன் கோரப்பட்டு பின்பு நன்ருகப் பரிசிலனை செய்யப்பட்ட பின்பே உதவிகள் வழங்கப்படவிருக்கின்றன.

உலகத் திருச்சபைக் கவுன்சில் கொடுத்த பணத்தின் ஒரு பகுதி அகதிகள் சுய வேலை வாய்ப்புத் திட்டங்களுக்குப் பாவிக்கப்படும் இப்படி அவர் கூறினர்.

(இ-6)

## விடுவிக்கப்பட்ட மாணவர்களை பதியக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை17

பூஸா தடுப்பு முகாம்களில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் தங்களது பெயர் விவரங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் பல்கலைக் கழக அகதிகள் புனர்வாழ்வு அமைப்பில் பதிவு செய்து கொள்ளுமாறு அமைப்பின் செயலாளர் கேட்டுக் கொள்கின்றுர். (இ)

வெஜிமைட்
முழுமையான குடும்பத்துக்கேற்ற
ஊட்டபானம்




விட்டமின் 'பீ' உடைன
ஈஸ்ட் சாறு பானுடன்
கலந்து சாப்பிட
அருமையானதாகவும்
சூடான பானமாக
புகழ்பெற்றும்
விழங்குகிறது.

விலை 29/75 தொடக்கம

விநியோகஸ்தர்கள்,
மில்லர்ஸ் லிமிடெட்
த. பெ. இல: 100.
கொழும்பு - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள்

## ஆங்கிலமொழியில் பாண்டித்தியம் பெறவேண்டும்

கரவெட்டி, ஜூலை 17
எதிர் காலத்தில் ஆங்கில மொழியின் முக்கியத்துவம் அதிகரிக்க இருப்பதால் ஆங்கில மொழியில் மாணவர்கள் பாண்டித்தியம் பெற வேண்டியது அவசியம்.

வதிரிதிருஇருதயக் கல்லூரியில் இடம்பெற்றகல்லூரி தினத்தில் உரையாற்றிய சட்டத்தரணி திரு. வி. மகாலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

கல்லூரி அதிபர் திரு. சி. வின்சன் தலைமை வகித்து உரையாற்றினுர்.

மற்றும் யாழ் மறை மாவட்டகிறிஸ்தவ சமய நிலையப் பணிப்பாளர் வண. பிதா ஆர். எம். ஜீ. நேசநாயகம் அடிகளார், பருத்தித்துறை பங்குத் தந்தை வண. பிதா எஸ். கிருபாகரன், மயிலிட்டி பங்குத் தந்தை வண பிதா பீற்றர் துரைரத்தினம், கரவெட்டி பங்குத் தந்தை வண, பிதா ஜெசோ. செல்வநாயகம், கொழும்புத் துறை குருமட பணிப்பாளர் வண பிதா எஸ். நிக்கலஸ் சம்பத்திரியார் கல்லூரி ஆசிரியர் திரு. என். அகஸ்ரீன் பாடசாலை மாணவர் மன்றச் செயலாளர் திரு. ஆர். ஈ. ஆனந்தராஜா ஆகியோரும் உரையாற்றினர்.

ஆசிரியை திருமதி ஏ. தணிகாசலம் நன்றியுரை வழங்கினுர்.

(இ-70)


# UNITED ENGINEERS

## விசேஷ இலவச தொழிற் பயிற்சி

அண்மைக்கால நிகழ்வுகளினுல் பாதிப்படைந்தவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் 3 மாத இலவச தொழிற் பயிற்சி

- ✶ Electric Welding
- ✶ Carpentry Work
- ✶ Masonary Work
- ✶ Log Sawing
- ✶ Crusher plant Operation & Maint.

பயிற்சிக் காலத்தில் நாளொன்றிற்கு ரூபா 20—30 அலவன்ஸ் வழங்கப்படும்.

வயது எல்லை 12 — 18

பயிற்சிபெற விரும்புவோர் 18 - 7 - 88 திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு நேரில் வரவும்.

**PON. ILANGAINATHAN**
MANAGING PARTNER
UNITED ENGINEERS

சாயி மர அரிவு ஆலை
91, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்,

(C 5794)



## கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

கொக்குவில் இளைஞர் சங்கமும் - மனோன்மணி சனசமூக நிலையமும் நடாத்தும் ஆறுபேர், நான்குபேர் கொண்ட மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தேவையான விபரங்களுடன், விண்ணப்பிக்கவும் கட்டணம் 25/-
விண்ணப்ப முடிவு திகதி: 31- 07- 88
பி. ப. 6.00 மணி வரை

செயலாளர்
மனோன்மணி சனசமூக நிலையம்
நந்தாவில் அம்மன் கோவிலடி
கொக்குவில்

(C/5793)


வடக்கு - கிழக்கு பிராந்திய ரீதியில்

# தமிழ்த் தொழிலாளர்கள் தனிச் சங்கம் அமைத்தனர்

## திருமலைத் துறைமுகத்தில்

திருகோணமலை, ஜூலை 17
திருகோணமலை துறைமுக அதிகார சபையில் கடமைபுரியும் தமிழ் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து வடக்கு - கிழக்கு தொழிலாளர் சங்கம் என்னும் ஒரு தொழிற் சங்கத்தையும் அவர்களின் நலன்களைக் கவனிக்கவென 'வடக்கு-கிழக்கு தொழிலாளர் நலன்புரிச்சங்கம்' ஒன்றையும் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்தனர்.

தொழிற் சங்கத்திற்கு திரு. என். இம்மானுவல் தலைவராகவும் திரு. ஆர். கலியுகவரதன் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நலன்புரிச் சங்கத்திற்கு திரு. கே. தம்பிராசா தலைவராகவும் திரு. டாரியஸ் பேக்கி செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொழிற்சங்கம் பிராந்தியரீதியில் உருவாக்கப்பட வேண்டியதற்கான காரணங்கள் அங்கு விளக்கப்பட்டன. அவையாவன:-

★சிவில்நிர்வாகத்தடையின்பின் தொழிலுக்குச் சென்ற தமிழ்பேசும் தொழிலாளருக்கு வேலை செய்ய அனுமதி மறுக்கப்பட்டது.

★ அவர்களுக்குரிய மாதாந்தக் கொடுப்பனவுகளை கொழும்பிலுள்ள முகாமைப்பீடத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வதிவு முகாமையாளர் கொடுக்க மறுத்தது.

★நிர்க்கதியாக்கப்பட்ட தமிழ் தொழிலாளர்களுக்கு அவ்விடயத்தில் எந்தத் தொழிற் சங்கமும் எதுவும் செய்யாதிருந்தது.

★ அவ்வேளையில்தொழிலாளரின் ஒன்றிணைந்த பலத்துடன் உருவாக்கப்பட்ட தற்காலிகக்குழு அவர்களின் பிரச்சினைகளை முடிந்தளவிற்குத் தீர்த்து வைத்தது.

(இ- 150)

## பெரும் தொகையான பணம் செலவிடப்பட்டும் விளையாட்டு ஆர்வம் குறைவு

சுன்னுகம், ஜூலை 17
நமது நாட்டில் கோடிக்கணக்கான ரூபா கல்விக்காகச் செலவிடப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதி விளையாட்டுக்காகவும் செலவிடப்படுகிறது. இருந்தபோதிலும் எம் மாணவர் மத்தியில் விளையாட்டு ஆர்வம் குறைவாகவே காணப்படுகிறது,

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற இல்லவிளையாட்டுப் போட்டியின் போது பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட யாழ் கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன் மேற்கண்டவாறு கூறினுர்.

வைபவத்திற்குத் தலைமை வகித்த மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தனது உரையில்; உடல் வளர்ச்சியும், உளவளர்ச்சியுடன்சேர்ந்துவளரும் நோக்கோடு பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவேண்டும். இப் போட்டியின் மூலம் மாணவர்கள் அரிய நற்பண்புகளைக் கற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்— என்றுர்,

ஏழாலை மகாவித்தியாலய அதிபர் திரு. ரி, டானியல் பாடசாலைக் கொடியேற்றி போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

உடுவில் திருச்சபைக் குழு வண. டி. ச. இரத்தினசிங்கம் அடிகளார், உடுவில் விளையாட்டு அதிகாரி திருமதி கெங்கேஸ்வரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். திருமதி கெங்கேஸ்வரன் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினுர். (இ-27)

## ஆயிரம் குடும்பங்களுக்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணம்

திருகோணமலை ஜூலை17
திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 4200 குடும்ப உறுப்பினர்களுக்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கம் அத்தியாவசிய உணவுப் பண்டங்களான அரிசி பருப்பு, சீனி, பால்மா, போன்றவற்றை நிவாரண உதவியாக வழங்கியுள்ளது.

இதே வேளை செஞ்சிலுவைச் சங்க வைத்தியக்குழுவினர் குச்சவெளி திருகோணமலை நகரம் போன்ற பகுதிகளில் இரு குழுக்களாக வைத்திய சேவைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

திருகோணமலை கன்னியா,பாலையூற்று,அன்புவழிபுரம், துவரங்காடு, இறக்ககண்டி, கும்புறுப்பிட்டி, குச்சவெளி கிண்ணியா மூதூர்பகுதிகளில் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டோருக்குவைத்திய சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன என்று செஞ்சிலுவைச் சங்க இணைப்பாளர் திரு. ஏ. கே. சின்ஹா உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய செஞ்சிலுவைச் சங்கம் திருகோணமலைப் பகுதியில் உள்ள ஆதரவற்ற சிறுவர் இல்லங்களுக்கும் அத்தியாவசிய உணவுப் பண்டங்களை நிவாரண உதவியாக வழங்கியுள்ளது. [இ]

## தெல்லிப்பழையில் சிறு கதை நாள்

யாழ்ப்பாணம் ஜூலை 17
இன்று 17 ஆம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ''சிறு கதை நாள்'' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று நடைபெற உள்ளது.

கலை இலக்கியக் களம் ஒழுங்கு செய்த பதினைந்தாவது ஒன்று கூடல் நிகழ்ச்சியிலேயே இந்தக் கலந்துரையாடல் நடைபெற உள்ளன.

கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற உள்ள இந்த விழா 4 கட்டங்களாக நடைபெறும்.

காலை 9 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை நடைபெறும் இந்த விழாவிலே நாட்டின் பிரபலம் வாய்ந்த சிறு கதை எழுத்தாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

(இ-9)

## இளைஞர் விடுதலை

நுவரெலியா ஜூலை 17
இவ்வருட ஆரம்பத்தில் தலவாக்கொல்லைப் பகுதியில், ஈழவர் முன்னணி என்று குறிப்பிடப்பட்ட சுவர் ஒட்டிகளை ஒட்டியவர்கள் என்ற சந்தேகத்தில் தலவாக்கொல்லை பொலிசாரினுல் கைது செய்யப்பட்ட வேலாயுதம் ஜெயக்குமார்-கந்தசாமி செல்லையா ஆகிய இருஇளைஞர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

(இ-58)


A/L 90
A/L 89 (1 வருட பிரிவு)
விஞ்ஞானம், வர்த்தகம், கலை
ஆரம்பம்: 23- 07 -88
**Bond Institution**
58A, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
(C 5854)



**RADIONT INSTITUTE**
ARIYALAI, JAFFNA

**A/L 90**

பொருளியல் — திரு.வரதராஜன்
கணக்கியல் — திரு.தனபாலசிங்கம்
அளவையியல் — திரு.S.S.மனோகரன்
வர்த்தகம் — திரு.ஜெயராமன்
திரு.இரத்தினம்
தமிழ் — செல்வி மீரா

**O/L Day Class 88 Dec.**

ஆசிரியர்கள்:
இரா. செல்வவடிவேல்,
S. S. மோகன், K. S. முத்துலிங்கம்
S. குயின்ரஸ், S. மீரா
பண்டிதர் துரைராஜா, S. அமிதா
R. கருணுகரன்

**அனைத்தும் ஆரம்பம் 20-07-88**
89 A/L வர்த்தகம்
துரித 1 வருட மீட்டல் வகுப்பு
திரு. T. ஜெயராமன்
(5313)


## 3 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
19-01-1909
மறைவு:
17-07-1985

**செ. பொன்னையா**

'' வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்''
எமது தந்தையாய் வையத்து வாழ்வாங்கு வாழ வழி செய்த அன்புத் தந்தையே! ஆண்டு மூன்றல்ல முப்பது சென்றுலும் எங்கள் அன்புருவம் நெஞ்சை விட்டகலாது.
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

அருமை மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி,
உற்றுர், உறவினர்.

மாரீசன்கூடல்,
இளவாலை.
[5189]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

18 – 7 – 88



தோற்றம்:
20 6-1938
மறைவு:
18-6-1988

**சரவணமுத்து தெட்சணுமூர்த்தி**
[சமூக சேவை அதிகாரி மன்னுர்]

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
தாய், சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்:
உடுவில் ... வடக்கு.
(5052)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

அந்தியேட்டி அழைப்பும்
நன்றி நவிலலும்



தோற்றம்:
18-6-1946
மறைவு:
17-6-1988

**திருமதி விக்கினேஸ்வரி (தவம்) சபாநடேசன்**
(மூளாய்)

பாசத்தின் உறைவிடமே
பண்பின் சிகரமே
அன்பின் சொரூபமே
குடும்பக் குல விளக்கே
திருமகளின் திருவுருவே
திருப்பதியான் கழல் போற்றும்
என் அன்பின் 'தவமே' அன்னையே
நாம் கதறி அழ எமைப் பிரிந்து
இறைவனடி சேர்ந்து விட்டீர்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அமரரது ஈமக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்தி மலர் வளையங்கள் அனுப்பியோருக்கும், பல்வேறு விதங்களில் உதவிகள் புரிந்த உற்றுர் உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

17-7-88 ஞாயிற்றுக்கிழமை அன்னுரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மகேசுர பூசையிலும் கலந்து சிறப்பித்து, ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் பிரிவால் துயருறும்:
கணவர் – செ. சபாநடேசன்,
[R. M. P கிரிப்பிற்றியா குருணுகல்]
மகன் – பகீரதன் [யூனியன் கல்லூரி தெல்லிப்பழை]
மகள் – பிரதீபா [மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு].
மாமா, மாமி, – திரு. திருமதி செல்லப்பா,
[இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர், தெல்லிப்பழை]
மைத்துனி. மைத்துனர்கள்,
சகோதரி, பெறுமக்கள், (மூளாய்)
[5312]


**MEDI ANALYZER AG**
177, FIRST CROSS STREET,
JAFFNA.
(Near Vembadi Junction)

மெடி அனலைசர் ஏஜி
177, முதலாம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
(வேம்படிச் சந்தி அருகாமையில்)

**Opening on the 19th of July 1988!**
A MEDICAL DIAGNOSTIC SERVICE
ALL MEDICAL LABORATORY TESTS & E. C. G. UNDERTAKEN BY QUALIFIED PERSONNEL

**1988 ஜூலை19ஆம் திகதி ஆரம்பம்!**
**மருத்துவ பரிசோதனை சேவை**

சகல வித மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகள் இ. சி. ஜி தேர்ச்சி பெற்ற மருத்துவ ஆய்வுகூட இயக்குனரால் செய்து ...
[5308]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. இயங்குவதற்குப் பணம் இல்லாத நிலை நவம்பரில் ஏற்படும் என்று எச்சரிக்கை!

## அதிபர் றேகனுடன் ஐ.நா செயலர் சந்திப்பு

ஐ. நா ஜூலை 16
ஐக்கிய நாடுகள் சபையினை நடத்துவதற்கு எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் பணம் இல்லாமற் போய்விடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஐ.நா பொதுச் செயலாளர் பெரெஸ்டி குயிலர், அமெரிக்க அதிபர் றேகனை நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

அப்போதே இந்த அபாயத்தை எடுத்துச் சொன்னர்.

உறுப்பு நாடுகள் ஆண்டு தோறும் வழங்கும் நன்கொடைப் பணத்தில் தான் ஐ.நா. ஸ்தாபனம் இயங்கி வருகின்றது.

அப்படிக் கிடைக்கும் நன்கொடைப் பணத்தில் கால் பங்கு அமெரிக்காவினல் வழங்கப்படுகின்றது. ஐ.நா அமெரிக்காவுக்கு எதிரான சக்திகளினல் பயன் படுத்தப்படுகின்றது என்று கூறி அமெரிக்கா நான் வழங்கும் நன்கொடைப் பணத்தைக் கொடுக்க மறுத்து வருகிறது.

ஐ. நா. ஸ்தாபனத்துக்கு அமெரிக்கா ஐந்நூறு மில்லியன் டாலர் பணத்தை வழங்க இருக்கிறது.

இதைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமாகவே ஐ. நா. பொதுச் செயலாளர், அதிபர் றேகனைச் சந்தித்துப் பேசினர்

அப்பணத்தைக் கொடுக்க அமெரிக்கா தொடர்ந்து மறுத்தால், எதிர் வரும் நவம்பரில் இருந்து ஐ.நா இயங்குவதற்குப் பணமே இல்லாத நிலை தான் ஏற்படும் என்று பொதுச் செயலாளர் பெரெஸ்டி குயிலர் தெரிவித்தார். (எ)

## ராஜீவின் ஸ்பெயின் விஜயம்

மாட்ரிட், ஜூலை 16
இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி ஸ்பெயின் நாட்டுக்கு நேற்று விஜயம் செய்தார்.

இரு தரப்பு உறவுகள் குறித்து பிரதமர்காந்தி, ஸ்பெயின் பிரதமருடன் பேச்சுக்களை நடத்தினர்.

வெளி உலகில்

## தமிழ் நாடு வேலை நிறுத்தம்

சென்னை, ஜூலை 16
தமிழ் நாடு அரசு ஊழியரில் ஒரு பிரிவினர் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பல தினங்களாக நடை பெற்று வரும் இவ்வேலை நிறுத்தத்தில் பாங்கு பற்றி வந்த நான்கு தொழிற்சங்காங்கள் இந்த அறிவித்தலை விடுத்தன என்று நேற்று மாநில அரசு அறிவித்தது. (எ)

# வளைகுடாயுத்தத்தை நிறுத்துக! பாதுகாப்புச் சபையில் வலியுறுத்து!!

ஐ. நா. ஜூலை 16
வளைகுடாவில் ஈரான் பயணிகள் விமானம் ஒன்றை அமெரிக்கா சுட்டு வீழ்த்திய சம்பவம் பற்றிய விசாரணையை ஐ. நா. பாதுகாப்புச்சபை ஒத்திவைத்தது.

இரண்டாவது நாளாக பாதுகாப்புச்சபை நேற்றுக்கூடி இப்பிரச்சினை குறித்து விவாதித்தது.

இச்சம்பவத்தில் 290 பயணிகள் உயிரிழந்தனர்,

ஈரானின் கோரிக்கையின்மீது பாதுகாப்புச் சபை இதுசம்பந்தமாக விவாதிக்க முன்வந்தது. விவாதத்தில் கலந்து கொண்ட அனைத்துநாடுகளின் பிரதிநிதிகளும். வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்தினர்.

விமானத்தாக்குதல்சம்பவத்தைச் சோவியத் யூனியனும் சீனவும் பலமாகக் கண்டித்தன.

வளைகுடாவில் இருந்து வல்லரசுகள் மற்றும் நாடுகளின் போர்க்சப்பல்கள் உடனே விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டன.

வளைகுடாவில் உள்ள சகல நாடுகளின் படைகளும் சர்வதேச எல்லைகளுக்கப்பால் சென்றுவிட வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதிநிதி வலியுறுத்தினர். (எ)

## வியட்னும் அரசியல் கைதிகள் அமெரிக்காவில் குடியேற அனுமதி!

ஹனேய், ஜூலை 16
வியட்னுமில் உள்ள முன்னுள் அரசியல்கைதிகளை அமெரிக்காவில் குடியேற அனுமதிக்கும் உடன்பாடு ஒன்று வியட்னுமுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஹனேயில் இரண்டு தினங்களாக, அமெரிக்க வியட்னும் அரசுகளின் அதிகாரிகளுக்கு இடையே நடந்த பேச்சுக்களின் முடிவில்உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது.

வியட்னுமில் தற்சமயம் 11 ஆயிரம் அரசியல் கைதிகள் தடுப்பு முகாம்களில் உள்ளனர். அவர்களின் குடும்பத்தினரின் எண்ணிக்கை சுமார் 40 ஆயிரம்.

இவர்கள் அனைவரும் அமெரிக்காவில் குடியேற இந்த உடன்பாடு அனுமதிக்கிறது.

சுமார் ஆறு லட்சம் பேர் அரசியல் கைதிகளாக இருக்கின்றனர் என்பதை அமெரிக்க அரசு இதுகாலவரைவலியுறுத்தி வந்தது. (எ)

## வி. பி. சிங் முயற்சி

புதுடில்லி, ஜூலை 16
எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சியில் ஜன் மோர்ச்சா தலைவரும் அலஹபாத்எம்பியுமான திரு. வி. பி. சிங் தீவிரமாக ஈடுபட்டு வருகிருர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுஅவர்ஹரியானு முதலமைச்சர் தேவிலாலைச் சந்தித்துப் பேசினர்.

# கப்பல் தாக்குதல் சம்பவம்: பிரெஞ்சு இளைஞன் சம்பந்தம்

ஏதென்ஸ், ஜூலை16
மத்தியதரைக் கடலில் உல்லாசப் பயணக் கப்பல் ஒன்று மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பிரெஞ்சுப்பிரசை ஒருவரும் சம்பந்தப்பட்டிருந்ததாக கிரேக்க அரசு குற்றம் சாட்டியது.

காயமடைந்த அந்த இளைஞன் பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டது.

கப்பலில் தாக்குதலை நடத்தியவர்களில் உயிரிழந்தவரும் ஒருவர்என்று உல்லாசப் பயணிகள் சிலர் அடையாளம் காட்டினராம்.

அவன் மாணவன் பயங்கரவாதியல்லன்' என்று இளைஞனின் பெற்ருேர் தெரிவித்தனர்.

கிரேக்க அரசின் கூற்றுக்கு பிரெஞ்சு அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

கப்பலில்இடம் பெற்ற தாக்குதலில் 9 உல்லாசப்பயணிகள் கொல்லப்பட்டனர்: 80 பேர் வரையில் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

# நிக்கரகுவா தூதரின் பிடிவாதம் தளர்ந்தது!

வாஷிங்டன், ஜூலை 16
நிக்கரகுவா அரசுத் தூதர் நேற்று அமெரிக்காவை விட்டுப் புறப்பட்டார்.

72 மணித்தியாலங்களுக்கிடையில் நாட்டைவிட்டு வெளியேறும்படி அமெரிக்க அரசு விடுத்திருந்த உத்தரவைப் புறக்கணிக்கப் போவதாக நிக்சரக்குவா தூதர் முதலில் அறிவித்து இருந்தார்.

நிக்கரகுவா அரசு மட்டுமே என்னை வெளியேற்றமுடியும் என்று அவர் வாதிட்டார்.

உத்தரவை மதித்து வெளியேருவிட்டால் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்திருந்தது.

அமெரிக்கத் தூதரையும் அவரின் 7 ஆலோசகர்களையும் நிக்கரக்குவா அரசு வெளியேற்றியதற்குப் பதிலடியாகவே அமெரிக்காவும் நிக்கரகுவா தூதரையும்அவரின் ஏழு ஆலோசகர்களையும் வெயேறும்படி உத்தரவிட்டது. (எ)

## பொய்யாமொழி

**குறள்:**

பகைமையும் கேண்மையும்
கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்

**பொருள்:**

கண்பார்வையின் வேறுபாடுகளை உணர வல்லவரைப் பெற்றுல், (ஒருவனுடைய மனத்தில் உள்ள) பகையையும் நட்பையும் அவனுடைய கண்களே சொல்லிவிடும்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22703
17-07-1988 த. பெ. இல. 23

## வர்த்தகர் கவனத்துக்கு!

தாங்கள் விளைவித்த பம்பாய் வெங்காயத்தை சந்தைப்படுத்த முடியாமல், நஷ்டப்பட்டுப் போகும் அபாய நிலையை எதிர் நோக்கி இருக்கிருர்கள் வடபகுதி விவசாயிகள்.

வெங்காயம் மிளகாய், உருளைக்கிழங்கு ஆகிய உப உணவுப் பயிர்களைப் போலவே, சமீப காலமாக பம்பாய் வெங்காயமும் வடபகுதி விவசாயிகளின் காசுப் பயிராக மாறி உள்ளது. அது மட்டுமன்றி, இப்பகுதியின் மிளகாய், வெங்காயம் போலவே பம்பாய் வெங்காயத்துக்கும் தெற்கில் மவுசும் விலையும் கிடைத்தன.

வடக்கின் விவசாயப் பொருளாதாரத்தை மழுங்கடித்து, குலைத்து, வீழ்த்திவிட வேண்டும் என்ற யு. என். பி. அரசின் சித்தாந்தம் எல்லோரும் அறிந்த பரம இரகசியம்.

1977 இல் யு. என். பி. அரசு பதவிக்கு வந்த பின்னர் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் விவசாயப் பொருளாதாரத்தை வீழ்த்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பல. குறிப்பாக 1983 ஆம் ஆண்டின் பின்னர் அந்த நோக்கமும் போக்கும் தீவிரமடைந்தன.

வடக்கின் மிளகாயும், வெங்சாயமும் விளைச்சல் கண்ட வேளைகளில் எல்லாம், வர்த்தக அமைச்சர் கதிரையில் அமர்ந்திருந்த திரு. அத்துலத் முதலி, வெளிநாட்டிலிருந்து அவற்றை இறக்குமதி செய்து வடபகுதி விவசாயி முதுகில் குத்தி வந்தார். ஒரு தடவை, சில தடவைகள் அல்ல; பலப்பல சந்தர்ப்பங்களில்.

உள்நாட்டு விவசாயிகளுக்கு உதவ வேண்டிய அமைச்சர், வடக்கு வாழ் விவசாயிகள் தமிழர்கள் என்பதால் அவர்களை உதைத்துத் தள்ளினர்.

வடக்கில் இப்போது பம்பாய் வெங்காய 'சீசன்'. ஆனல் கட்டுப்பாடில்லாத இறக்குமதி வசதியைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் இருந்து ஏராளமான அளவில் கொழும்பில் பம்பாய் வெங்காயம் குவிக்கப்பட்டிருக்கிறது.

தனது மூக்கு அறுபட்டாலும் பரவாயில்லை. எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டும் என்ற நோக்கம். ஆம். தமிழர்கள் யு. என். பி. அரசுக்கு எதிரிகள் என்பதையும் நிரூபிக்கிருர் அமைச்சர் அத்துலத்தார்.

பல இன்னல்களுக்கு மத்தியில், அதிக உற்பத்திச் செலவுடன் விளைவித்த பம்பாய் வெங்காயத்தை, எப்படி வெளிநாட்டுச் சரக்கின் குறைந்த விலைக்கு ஈடுகொடுத்துக் கொழும்பில் விற்க முடியும்?

அதனுல் வடபகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பம்பாய் வெங்காயத்துக்கு இப்போது தென்னிலங்கைச் சந்தை மறித்து அடைக்கப்பட்டுவிட்டது!

அது போதாது என்று உள்ளூரிலும் — தமிழ்ப் பிரதேசங்களிலும் — கொழும்பிலிருந்து வெளிநாட்டு பம்பாய் வெங்காயம் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளது. அதனுல் உள்ளூர் உற்பத்திக்கு, உள்ளூரிலேயே சந்தை வாய்ப்பு இல்லாமற்போகும் அபாயம் உருவாகிவிட்டது.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலைக்கு உள்ளூர் விவசாயி தள்ளப்பட்டுள்ளான்.

இதனை அனுமதிக்கக்கூடாது. தமிழ்ப் பகுதிகளுக்கு வெளிநாட்டு வெங்காயம் கொண்டுவருவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

எங்கள் வர்த்தகர்களுக்கு சுதேசியப் பொருள்களுக்கு ஆதரவளிக்கும் சிந்தை வர வேண்டும். உள்நாட்டு உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கே அவர்கள் முதலிடம் தரவேண்டும்.

விவசாயிகள் எமது சமூகத்தின் ஓர் அங்கம். அவர்களை நஷ்டமடையவிட்டு வெளிநாட்டுப் பொருள்களுக்கு ஆதரவளிக்கக் கூடாது. இன்று தமிழ் விவசாயிகள்மீது வஞ்சம் தீர்க்கும் அரசு நாளை தமிழ் வர்த்தகர்கள்மீதும் வஞ்சம் தீர்க்கும் என்பதை மறந்து விடலாகாது.

உள்நாட்டு உற்பத்தியாளருக்கு உதவிடாது, வெளிநாட்டுப் பொருள்களைச் சந்தைப்படுத்தி இலாபம் தேட முனையும் வர்த்தகர்கள் சமூக விரோதிகளாகக் கணிக்கப் படவேண்டியவர்கள்.

பாவனையாளர்களும் உள்நாட்டு உற்பத்திகளுக்கே முதலிடம் கொடுக்கப் பழகிக்கொள்ளுதல்வேண்டும். இல்லையேல் நாம் பொருளாதார சுதந்திரத்தைக் கனவிலும் நினைத்துப்பார்க்க முடியாது. அது இல்லையேல் அரசியல் சுதந்திரத்துக்குப் போராடுவதும் அர்த்தமற்றதாகிவிடும்.

மட்டக்களப்பில் கொல்லப்பட்ட

# ஆசிரியர் குடும்பங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குக

## மகாசிவம் தலைமையிலான குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை17
அண்மைக்காலச் சம்பவங்களினுல் மட்டக்களப்பு மாவட்டத்தில் மரணமான ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம், சம்பளம், நஷ்டஈடு ஆகியவற்றை மேலும் தாமதியாது வழங்குக.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த.மகாசிவம் மட்டக்களப்புப் பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. ஈ,ஜே. சற்குணராஜாவிடம் மேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக திரு. மகாசிவம் தலைமையிலான சங்கத் தூதுக்குழு மட்டக்களப்புப் பிராந்திய கல்விப்பணிப்பாளரைச் சந்தித்தது.

அண்மைக்காலச் சம்பவங்களினுல் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 11 அப்பாவித் தமிழ் ஆசிரியர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானேர் இந்திய அல்லது இலங்கைப் படைகளின் நடவடிக்கைகளின்போது கொல்லப்பட்டுள்ளனர். சிலர் போட்டிப் போராளிக் குழுக்களினுல் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஓர் ஆசிரியரினது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்ட ஆசிரியர்களின் விதவைகளுக்கோ அல்லதுவிரதர்களுக்கோ மட்டக்களப்பு கல்வித் திணைக்களம் ஓய்வூதியத்தையோ அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 55 வயது வரை சம்பளத்தையோ அல்லது எவ்வித நஷ்டஈட்டையோ இதுவரை வழங்கவில்லை,

இவ்வாசிரியர்களின் குடும்பங்கள் மிகுந்த வேதனையுடன் பலவகையான இன்னல்களின் மத்தியில் பொருளாதாரத் தாக்கத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்றும் திரு. த. மகாசிவம் தலைமையிலான தூதுக்குழு தெரிவித்தது.

இவ்வாசிரியர்களின் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை மிகவும் அதியாவசியம் என்றும் மேலும் எவ்வித தாமதமுமின்றி உடன் நடவடிக்கை தேவை என்றும் தூதுக்குழு வலியுறுத்தியது.

இ. த. ஆ. சங்கத் தலைவர் திரு. நா. சோமசுந்தரம், பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம், நிர்வாகச் செயலாளர் திரு. த. அருணகிரிராசா, மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் திரு. வி. த. குமாரசாமி, மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திரு. எஸ். பாபு ஆகியோர் தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

அடுத்த இருவாரத்தில் [illegible] முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுப்பதாகவும் மேற்கொண்டு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட விதவைகளுக்கும் சங்கத்திற்கும் அறிவிப்பதாகவும் கல்விப்பணிப்பாளர் திரு. ஈ. ஜே. சற்குணராஜா உறுதி அளித்தார்.

கொலை செய்யப்பட்ட ஆசிரியர்களின் விதவைகளையும் பிள்ளைகளையும் நேரடியாக சங்கத்தின் பொதுச் செயலாளரும் நிர்வாகச் செயலாளரும் சந்தித்து ஆறுதல் கூறினர்.

அவர்களுக்குரிய ஓய்வூதியம், வேதனம், நஷ்டஈடு ஆகியவற்றைப் பெற்றுக்கொடுக்க சங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என உறுதி அளித்தனர். (இ)

## ஸ்ரீமுத்துமாரி அம்மன் கொடியேற்றம்

அளவெட்டி தெற்கு ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவிருக்கும் உற்சவ காலத்தில் 28 ஆம் திகதி புதன் இரதோற்சவமும் 29 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் [illegible]. மகோற்சவக்கிரியைகள் [illegible] 6.00 மணியுடன்முடிவடையும்.

# ஒப்பந்தத்துக்கு ஒரு வயது....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தும் யூரேனேஸ், நெப்டியூனேடு இணைந்ததும் ஆகும். தனு ஒப்பந்த ஜென்ம லக்கினமானதால் அரசியல் தீர்வுகளைப் பின் தள்ளிக் கொண்டே போகும். சனி ஒரு மந்தைக்கிரகம் சனியின் 7ம் இடமான உள்நாட்டுப் பிரச்சினையில் ராகு இருப்பதால், போராளிகள் நிலைமை உயர்வடைய இடமுண்டு.

9ம் இடம் ஜனுதிபதிக்குரியது. செவ்வாய் அட்டமத்தில், தமிழரின் இலக்கினத்திற்கு 12 ல், ஜன்மத்திற்கு 8இல். 8ம் இடம் மரணம், 12ம் இடம் மறைவு. 5 X 8க்குரிய குரு 10 ல் இருப்பதும் 3 X 10 க்குரிய சுக்கிரனுடன் இணைவதும் 10 இடம் அரசாங்கமாவதால், தேவகுருவும், அசுர குருவும் சேர்க்கையால் மருதயோகம் பிறக்கின்றது. பலன் ஸ்திரச் சொத்து வருகையேற்படும்.

தமிழரின் இலக்கினத்திற்கு குரு, சுக்கிரன், 2இல் இருப்பதும், குரு போராளிகளுக்குரிய புதனின் வீட்டை 5ம் பார்வையாக பார்ப்பதும், சுக்கிரன், 7ம் பார்வையாக தமிழரின் இலக்கினுதிபதியின் 4ம் வீடு, பூமி, நிலம், இதைப் பார்ப்பதால், தமிழரின் பூர்வீகச் சொத்துக் கிடைக்க இடமுண்டு.

11 ஆம் வீடு நாடாளுமன்றம் இதற்கு அதிபதி புதன். புதன் போராளிகளின் கிரகம்

தமிழரின் இலக்கினுபதியான செவ்வாய் 4ம் பார்வையாக 11 ஆம் வீட்டை (நாடாளுமன்றம்) பார்ப்பதால் இனப்பிரச்சினை ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் போராளிகளின் பக்கத்தின் சார்பாகவே பேச வாய்ப்புண்டு.

ஒப்பந்தம் ஜன்ம ஜாதகப்படி 11ம் வீடான நாடாளுமன்றத்தை பூமி, நிலத்திற்குரியவரான குரு 4க்குரியவர் 5ல் இருந்து கொண்டு 7ம் பார்வையாக 11ம் வீடான நாடாளுமன்றத்தை பார்ப்பதும் தமிழரின் பூமி கிடைக்க வழியுண்டு. 5லே இருக்கும் சனி 6 X 7 க்குரியவர் (ராணுவம், உள்நாட்டுப் பிரச்சனை) தனது சம சப்தமப் பார்வையாக 180 பாகையில் 11ம் வீடான நாடாளுமன்றத்தைப் பார்ப்பதால் தீர்வுகளில் சுணக்கமேற்படும்.

12ம் இடம் சிறைச்சாலை, ஒற்றர்கட்கு உரியது. சந்திர லக்கினத்திற்கு உரியவரான சூரியன் 12ம் இடமான சிறைச்சாலையில் இருப்பது ஜனுதிபதி ஸ்தானத்திற்கு நல்ல தல்ல. 11ம் வீடான நடாளுமன்றத்திற்குரிய புதன் உடன் (போராளிக்குரியவர்) சேர்வதும், புதன் சந்திர லக்கினத்திற்கு மறைவில் இருப்பதாலும் சிறைவாசமும், ஒற்றர் ஊடுருவல்களும் அதிக அளவில்நடைபெறும். ஜன்ம லக்கினப்படி பார்த்தால் ஜனுதிபதி ஸ்தானமும் மரண ஸ்தானமும் முறையே 9 X 8 பரிவர்த்தனம் ஒரு அவயோகமாகி ஒரு பிரிவையுண்டாக்கக் கூடிய நிலையை உருவாக்கும்.

இலங்கையின் லக்கினமான கும்பத்தைப் பார்த்தால் சனி 1 X 12க்குரியவர் சனி தனுவில் (2) இருந்து கொண்டு 3ம் பார்வையாக குடும்பத்தைப் பார்ப்பதால் தான், தென் இலங்கை தாக்கமடைகிறது. தமிழரின் லக்கினத்திற்கு சனி 9ல் இருப்பதால் தமிழ்ப் பிரதேசம், தன் இஷ்டப்படி நடைபெறுகிறது.

தமிழரின் லக்கினுதிபதியான செவ்வாய் 12ல் மீனத்தில் இருக்கிருர். ஆகஸ்டில் 26ந் திகதியில் வக்கிரமடைந்து அக்டோபர் 28ல் வக்கிர நிவர்த்தியடைகிருர்.

ஜனவரி 7ம் திகதியில் மேடத்தையடையும் செவ்வாய் தனது சொந்த வீட்டில் ஆட்சியாய் இருப்பார்.

நவம்பர் 2ல் போராளியான புதனை செவ்வாய் 8ம் பார்வையாகப் பார்க்கும்போது போராளிகளின் கையோங்கும் தமிழரின் இலக்கினத்திற்கு 2ல் குருநிற்பதும் ஜனுதிபதியான சூரியனையும் போராளியான புதனையும் 7ம் பார்வையில் பார்ப்பதாலும் தமிழர்களுக்கு நற்பலன்கள் கிடைக்க வழி செய்கிறது.

1989 ல் தமிழருக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதை நவநாயகர்கள் தெரிவிக்கிருர்கள்.

- வை. சண்முகசுந்தரம் -

## சூராவத்தை முத்துமாரிஅம்மன் மஹோற்சவம்

சூராவத்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மஹோற்சவம் நாளை 18 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இந்த விழாவில் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும், 27 புதன்கிழமை தேர்த் திருவிழாவும், 28 வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைரவர் பொங்கலும் இடம் பெற உள்ளன. (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சேட்டிங் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்

யாழ்நகரில்

மயூரா சென்ரர்

13 B, நவினசந்தை. :-: யாழ்நகர்.



# உதயன்

17 - 07 - 1988 ஞாயிற்றுக்கிழமை



திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுர ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்

13 B, நவினசந்தை, :-: யாழ்நகர்.



BECON

156/3, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

O/L பகல் நேரவகுப்பு

| | | |
|---|---|---|
| கணிதம் | — | தயாபரன் |
| விஞ்ஞானம் | — | ரவிந்திரன் |
| தமிழ் / இந்துசமயம் | — | தாஸ் |
| சமூகக்கல்வி | — | பூபாலசிங்கம் |
| ஆங்கிலம் | — | குமார் |
| வர்த்தகம் | — | ஜோதீஸ்வரன் |

ஆரம்பம் - 18- 07- 88

8 - 30 a . m

மாலை நேர வகுப்பு

ஆரம்பம் - 3- 30 p. m

(சி-5856)



பதவி வெற்றிடங்கள்

நீரிறைக்கும் மோட்டார் பம்ப் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் பின்வரும் தொழில் தெரிந்தவர்களும் பயிலுனர்களும் தேவை:

1- பித்தளை வார்ப்பு வேலை(Moulders)
2- Fitters

நற்சான்றுப் பத்திரங்களுடனும், அனுபவ சான்றிதழ்களுடனும் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை (18ஆம் 19ஆம் திகதிகளில்) நேரில் வரவும்.

முகாமையாளர்,
சொலிட்
சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு.

(5316)


## நாம் நேசக்கரம்.........

(1-ம்பக்கத்தொடர்ச்சி)
கொண்டிருக்கும் இந்த நிலையில், இந்த அர்த்தமில்லாத யுத்தத்தை ஒரு முடிவுக்குக்கொண்டுவர இந்திய அரசுக்கு நாம் தெரிவித்த ஆலோசனைகளை மக்களும் அங்கீகரித்தனர். அதுமட்டுமன்றி விவேகமற்ற இராணுவ நடவடிக்கைகளுக்கும் மத்தியிலும், அந்த ஆலோசனைகளை நிறைவேற்றும்படி சாத்வீகமான முறையில் குரல் எழுப்பினர்கள். எமது மக்களின் உணர்வுகள் இந்திய அரசின் அசட்டுக் கௌரவத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

எமது இயக்கத்தைப் பூண்டோடு அழிக்க சங்கணம் கட்டிக்கொண்டு தன்னுடைய இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு, அவற்றுக்கெல்லாம் கவர்ச்சிகரமான பெயர்களையும் வைத்துக்கொண்டு கடந்த காலங்களில் இந்தியா சாதித்தது என்ன?

எமது மக்களைப் படுகொலை செய்து எமது சகோதரிகளை மானபங்கம் செய்து எண்ணிப் பார்க்க முடியாத சொத்துக்களை அழித்ததோடல்லாமல், உபயோகமற்ற இந்த யுத்தத்தில் பெறுமதிமிக்க பல இந்திய உயிர்களுக்கும்சமாதிகள் கட்டப்பட்டன. அர்த்தமில்லாத இம்மரணங்களின் தன்மையை இந்திய பொதுமக்கள் உணர்ந்து கொள்ளாமல் இருப்பதற்காக ''பரம் வீர் சக்கா'' போன்ற விருதுகளை வழங்கி,' அவர்களைத் தியாகிகளாக மக்களுக்கு காட்டி, தொடர்ந்தும் தமது கௌரவத்திற்கான யுத்தத்தைத் தூர நின்று நடத்துவதிலேயே இந்திய அரசு கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

எமது மக்களின் எதிர்கால சுபிட்சத்திற்காக, யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்காக, நாங்கள் நேசக்கரங்களை நீட்டிய போதெல்லாம், அதை எங்களுடைய பலவீனமாக நினைத்து இந்திய அரசு உதாசீனம் செய்கிறது. மறுபுறத்தில் பேச்சுக்கள் நடைபெறுகின்றன என்று அறிக்கைகள் விட்டுக்கொண்டு அதன் ''மை'' காயும் முன்பே இராணுவ நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இதுவரை காலமும் 'சமரசப்பேச்சுக்கள்' என்னும் போர்வையைக் கொண்டு தனது இராணுவ விவேகமின்மையை மூடிமறைக்க இந்தியா எடுத்த நடவடிக்கைகளை உலகமும் புரிந்துகொண்டிருக்கின்றது.

இந்த காலாவதியாகிப்போன கபடதந்திர உபாயத்தைத் தனது சக்திமிக்க வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் ஊடாக திரும்பத் திரும்ப பிரசாரம் செய்து, மக்களை ஒரு குழப்பநிலைக்கு உள்ளாக்கி, எமது இயக்கத்தை தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்திவிடலாம்; அவர்களை அழித்து விடலாம்என்று இந்திய அரசு நினைக்கின்றது.

ஆனால் இந்திய அரசின் விவேகமற்ற நடவடிக்கைகளினால் இக்கட்டான ஒரு நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ள தமிழ் மக்கள் தமது சுதந்திரத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றுவதற்காக ஒரு நீண்டகால போராட்டத்திற்குத் தம்மைத் தயார்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டம்முறியடிக்கப்பட்டதாக வரலாறே இல்லை- இதுவே எமது மக்களினதும் நம்பிக்கை''.

—இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-164)

## நெடுங்கேணி...

கள்.

பேரணியில் கொண்டு செல்லப்பட்ட மகஜரை நெடுங்கேணி பாடசாலை மைதானத்திற்கு வந்திருந்த இராணுவ அதிகாரியான பிரிகேடியர் ஜோசி, மேஜர் நாயர் ஆகியோர் கையேற்றனர்.

(ஒ-164)

## இன்று சாயி பஜனை

யாழ்ப்பாணம் ஜூலை 17

யாழ் மத்தி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தினர் அகண்ட நாம பஜனை ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் இருந்து மாலைவரை நடத்தவுள்ளனர்.

மக்கள் தற்போது அனுபவித்து வரும் துன்பங்களைப் போக்கவும் நாட்டில் சமாதானமும் சாந்தியும் நிலவவும் பகவானின் அருள் வேண்டி நடத்தப்படும்இப்பஜனை யாழ் மணிக்கூட்டு வீதியில் உள்ள ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஒ-5)

## அமைதி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இப் பகுதியூடாகச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் படையினரின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டே அனுமதிக்கப்படுகின்றன.

இதேவேளை யாழ்ப்பாணத்திலும் படையினர் தமது சென்றி நிலைகளை பலப்படுத்திவருகின்றனர்.

(ஒ-10)

## 500 பொலீஸார்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
தினம், எஸ். குலதிலகராசா ஆகியோரும்.

கிளிநொச்சி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு. எஸ். சிவபாலசுந்தரம். மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு எஸ். சண்முகராஜன், மாத்தறை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு. எஸ். விமலநாதன், கொழும்பு தொலைத் தொடர்பு பொலீஸ் பிரிவைச் சேர்ந்த திரு. எஸ். சிவநாதன் ஆகியோரே பதவி உயர்வு பெற்றவர்களாவர்.

(ஒ-10)

## ஐ.நா.-----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
எஸ். லி. சொங்கும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம்வந்தனர்.

இந்தியாவிலிருந்து திரும்பி வரும் ஈழத்தமிழர்களின் நலன்களைக் கவனிக்கவென்று இப்போது தலைமன்னாரிலும் காங்கேசன்துறையிலும் இரண்டு நிலையங்களை ஐ.நா அ.உ ஸ்தானிகராலயம் நிறுவியுள்ளது.

(ஒ-6)

## யாழ்........

(1-ம்பக்கத்தொடர்ச்சி)
3 நாட்கள் மட்டுமே இயங்கக் கூடியதாக இருக்கும். ஏனைய அனைத்து நாட்களும் விடுமுறை நாட்களாக உள்ளன.

இதே சமயம் யாழ்-செயலகத்திற்கு உணவு முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன. இவற்றை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு மேலதிக வேலை நாட்கள் தேவைப்படுகின்றன.

எனவேதான் இம் மாதத்தின் செயற்படுகளை மட்டும் 20-ஆம் திகதிய ஆரம்பிப்பதற்கு அனுமதி பெறுவது குறித்து முயற்சி செய்யப்படுகிறது. (உ-9)


யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

A/L 90

தாவரவியல்

ஆசிரியர் :

திரு. போ. ஐங்கரநேசன்

| | |
|---|---|
| செவ்வாய் / வியாழன் | காலை 6.15 - 7.15 பிரிவு I |
| சனி / ஞாயிறு | காலை 6.30 - 7.30 பிரிவு II |

(5314)



எமது கல்லூரியின்
நூற்றுண்டு விழா 1989 - 1990

சகல பழைய மாணவர்களுக்கும்

இச் சந்தர்ப்பத்தில் பழைய மாணவர்களைப் பற்றிய தகவல்கள் மிக முக்கியமானதாகும். ஆகவே சகல பழைய மாணவர்களையும் ஆயுட்கால அங்கத்தவர்களாகச் சேரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஏற்கனவே ஆயுட்கால அங்கத்தவர்களாக இருப்போர், தங்களது முகவரி, தொழில், இடம் ஆகியவற்றில் ஏதாவது மாற்றம் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.

மேலதிக விவரங்களுக்கு:

கப்டன் N. சோமசுந்தரம்
உப அதிபர்,
யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்

என்ற முகவரியுடன் நேரடியாகவோ, கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

சு. டிவகலாலா
செயலாளர்,

(C5867)



இதோ! உங்கள் பிரபல்ய போஷாக்கு நிறைந்த

லீடா

முழு ஆடைப்பால்மா

வசதியான பக்கட்களில்




விநியோகஸ்தர்கள்,
மில்லர்ஸ் லிமிடெட்
த. பெ. இல: 100,
கொழும்பு - 1

400 கிராம் பககட் ரூ. 29/90
1 கி. கிராம் பக்கட் ரூ. 65/=
2 கி. கிராம் பக்கட் ரூ. 10[illegible]

லீடா இப்பொழுது ஓர்குடும்பத்தின் அங்கம்


## மரண அறிவித்தல்கள்

### திரு. ஐயம்பிள்ளை நாகநாதர்

நெடுந்தீவு வாசியும் வேலணை 5-ஆம் வட்டாரத்தில் வசிப்பவரும் ஆகிய ஐயம்பிள்ளை நாகநாதர் காலமாகிவிட்டார். அன்னார் தையல்முத்துவின் அன்புக் கணவரும், நாகம்மா (பிரான்ஸ்), குமாரசாமி (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு), கணேஷன் (குவைத்), கலாமதி (பிரான்ஸ், கலைவாணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வடிவழகம்மா. ஜெயவதி (ஆசிரியை நெடுந்தீவு), சந்திரகுமார் (பிரான்ஸ்), ராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுஷா, 'செந்தூரன், சஞ்ஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 16-7-88இல் சாட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். (5320)

### நாகலிங்கம். தெய்வானைப்பிள்ளை

அராலி தெற்கிற் பிறந்தவரும், வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் வசித்தவருமாகிய திருமதி நாகலிங்கம் தெய்வானைப்பிள்ளை 16 - 07 - 88 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை நாகலிங்கம் (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும் சரவணபவானந்தன் [N. S. P. ஆனந்தன் Asst. General Manager Peoples Bank], காலஞ் சென்ற திருமதி கதிரவேற்பிள்ளை தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரியின் அன்பு மாமியாரும் க. விவேகானந்தன், ச. ஜீவமலர் ச. பிரியதர்ஷினி, ச. அருச்சுனா ச. அஜந்தா, ச. நாராயணா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

ஈமக் கிரியைகள் No. 1, சிவப்பிரகாசம் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 17-7-88 இன்று காலை 11.00 மணியளவில் நடைபெறும். பூதவுடல் தகனத்திற்[illegible] பையன்மணல் மயானத்திற்[illegible] எடுத்துச் செல்லப்படும்.

No. 1 சிவப்பிரகாசம் வீதி. [illegible]
வண்ணார்பண்ணை N. S. P. ஆனந்தன்

### திரு. துரைசாமி வைத்தியநாதன்

கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு. துரைசாமி வைத்தியநாதன் [ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்] மீன்பிடித் திணைக்களம்] காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற துரைசாமி[ஆசிரியர்] காலம்சென்ற மாணிக்கவல்லி ஆகியோரின் அன்பு மகனும்; கனகாம்பிகையின் அன்புக் கணவரும், ரோகிணி, வரதராஜன், இந்திராணி பிரியதர்சினி [லண்டன்], தில்லைராஜன் [பிரான்ஸ்], குமுதினி, சௌந்தரராஜன் [ஜெர்மனி], திருவருட்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சாந்தகுமார், சுந்தரதாசன் [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும்; சண்முகரத்தினம், சரஸ்வதி, மங்கையர்க்கரசி, திருஞானசம்பந்தர் [சவுதி அரேபியா], இராமச்சந்திரன், சகுந்தலாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரரும்; அஜேஜன், லவன், அருணன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-07-88 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல. 20/2, சுவாமியார் வீதி, கொழும்புத்துறையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகத் துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
திருமதி கனகாம்பிகை வைத்தியநாதன்
(5327)

### விசுவநாதர் பொன்னம்பலம்

(O. A , Building Dept., Jaffna)

மாவிட்டபுரம் தெற்கைச் சேர்ந்த விசுவநாதர் பொன்னம்பலம் காலமானார். இவர் காலம்சென்ற மாவிட்டபுரம் விசுவநாதர் செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் பத்மதேவியின் அன்புக் கணவரும் காங்கேயன், பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருநெல்வேலியைச் சேர்ந்த காலம்சென்ற நாகநாதர் (Rtd. Post Master), புஷ்பகாந்தி தம்பதிகளின் மருமகனும் பெரியதம்பி, கனகரட்ணம், கந்தையா (Executive Engineer R.D.A. Kurunagala), திருமதி பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீ புஷ்பநாதன் (Principal, Union College, Tellippalai), பாலசுப்ரமணியம் (Engineer Telecommunication Dept. Colombo), விஜயநாதன் (Canada), சிவநாதன் Canada), சத்திபநாதன் (Australia), காலம்சென்ற தர்மவதி, காலம்சென்ற புனிதவதி, கௌசல்யாதேவி (Canada), சத்தியதேவி (U.K.) ஆகியோரின் மைத்துனருமாவார்.

ஈமக்கிரிகைகள் 18-7-88 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் குடும்ப மயானத்தில் நடைபெறும்.

தகவல்: திருமதி பத்மதேவி பொன்னம்பலம்
மாவிட்டபுரம்.
தெல்லிப்பளை. (5079)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் [illegible] 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Sunday 17 th July 1988.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org